பக்கங்கள்: பதினாறு

Registered as a Ne[...]per

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 26 சனிக்கிழமை (10.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:045

# ஆனையிறவும் வீழ்ந்தது!

## வவுனியா முதல் யாழ்ப்பாணம் வரையான ஏ–9 வீதி படையினரின் முழுக்கட்டுப்பாட்டில்

கிளிநொச்சி, ஜனவரி 10

கிளிநொச்சிக்கு வடக்கே, ஏ- 9 வீதியில் அமைந்திருந்த முக்கிய பகுதியான ஆனையிறவை நேற்றுப் பிற்பகல் படையினர் முழுமையாகக் கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கின்றது.

யாழ். முன்னரங்கிலிருந்து முன்னேறிய 53ஆவது மற்றும் 55ஆவது படைப் பிரிவுகள், முறையே பரந்தன் சந்தியிலிருந்தும் பூநகரிப் பக்கமாக இருந்தும் சென்ற ஏனைய படையணிகளுடன் நேற்றுப் பிற்பகலில் ஆனையிறவுப் பகுதியில் இணைந்து கொண்டன என்று அறிவிக்கப்பட்டது.

(13 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

காங்கேசன்துறை பொலிஸாரால் நேற்று மாலை 6 மணியளவில் நான்கு சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

'பொலித்தீன்' பைகளில் சுற்றப்பட்ட நிலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள இச்சடலங்கள் பிரதேச அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்கள் எங்கு நடைபெற்ற சம்பவத்தில் உயிரிழந்தவர்களினுடையவை என்ற விவரம் நேற்றிரவு வரை வெளியாகவில்லை. (அ-1)

## இராணுவத்தின் தொடர் வெற்றியை திசை திருப்ப தீயசக்திகள் முயற்சி!

### 'உதயன்' மீதான தாக்குதலும் அத்தகையதே என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.10

''இராணுவத்தினரின் வெற்றியைத் திசைதிருப்ப சில சக்திகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. சர்வதேச ஊடக சுதந்திர தினத்துக்கு முதல் நாள் யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை மீது தாக்குதல் நடத்தப்பட்டமையும் அத்தகைய நோக்கத்துக்கானதே. இந்த முயற்சிகளை இனிமேல் முறியடிப்பது எமக்குப் பெரிய விடயமல்ல.''

இராணுவம் ஆனையிறவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து நேற்று ரூபவாஹினியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது பேச்சில் மேலும் சொன்னதாவது:-

ஜனவரி 2 ஆம் திகதி கிளிநொச்சியை எமது இராணுவத்தினர் வெற்றிகரமாகக் கைப்பற்றினர். இன்று (நேற்று) ஆனையிறவு பகுதி முழுமையாக இராணுவத்தினர் வசம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்க முகாமையாளர் வவுனியாவில் சூட்டுக்குப் பலி

வவுனியா, ஜன.10

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கூட்டுறவுச்சங்க முகாமையாளர் ஒருவர் உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான நடராசா பத்மசிறி (வயது - 38) என்பவரே தனது மூன்றாவது கைக்குழந்தை பிறந்து 31 ஆவது நாள் வைபவத்தின் போதே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளிலும் ஓட்டோவிலும் அவரது வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள் அவரைப் பெயர் சொல்லி அழைத்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மொறவெவில் கிளைமோர் மூன்று படையினர் உட்பட 7 பேர் பலி

கொழும்பு, ஜன.10

திருகோணமலை, மொறவெவ, நெலுவப் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் வீதியோரத்தில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வெடித்ததில் விமானப்படையினர் மூவர் உட்பட ஏழுபேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் படுகாயம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளிவிவகாரச் செயலாளர் பொங்கலன்று கொழும்பு வருகிறார்

### 'சார்க்' கட்டமைப்புத் தொடர்பாக பேசுவதற்கே!

கொழும்பு, ஜன.10

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் இரண்டுநாள் விஜயமாகத் தைப்பொங்கலன்று கொழும்பு வருகின்றார் எனத் தெரியவருகின்றது.

எனினும், இந்திய வெளிவிவகார (16 ஆம் பக்கம் பார்க்க)

## வான்., ஷெல் தாக்குதல்களை வன்னியில் உடன் நிறுத்துங்கள்

### ஜனாதிபதியிடம் கனகரத்தினம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன.10

''வன்னி மக்களை நாளும் பொழுதும் நேரில் காணும் வன்னி பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குள்ள சட்ட ரீதியான உரிமைகளின் அடிப்படையில் இந்த கொடூரமான (16 ஆம் பக்கம் பார்க்க)

## லஸந்தவின் கொலையை கண்டித்து ஐ.தே.கட்சியினர் சபை நடுவே ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜன. 10

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலையைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கறுப்பு மற்றும் சிவப்பு நிறப் பட்டியல்களைக் கழுத்தில் அணிந்து, அரசுக்கு எதிரான வாசகங்களைக் கொண்ட பதாகைகளைத் தாங்கிய வண்ணம் அவர்கள் சபா பீடத்திற்கு முன்பாக அமர்ந்து அந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மத்தியில் நாளாந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கூச்சல் போட்டு இடையூறு விளைவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூக்குரலுக்கு எதிராக அரச அமைச்சர்களும் கூக்குரலிட்டனர்.

ஐ.தே.கட்சியினர் 'கொலைகாரனே துண்டு போட்டவனே', 'லஸந்தவைக் கொலை செய்தது இந்த அரசுதான்' போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியதோடு அதே கோஷங்களையும் எழுப்பினர்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் கூடியவுடனேயே இந்த ஆர்ப்பாட்டமும் ஆரம்பமானது.

(13 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தாலும் கட்டுப்படுத்த முடியாத புலனாய்வுப் பிரிவினரே சூத்திரதாரிகள் என்கிறார் ரணில்

கொழும்பு, ஜன. 10

அரசால் கட்டுப்படுத்த முடியாத புலனாய்வுப்பிரிவினர் சிலரே 'சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவைக் கொலை செய்தனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நேற்று ஐ.தே.கட்சி சபையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துக் கூறிய அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

லஸந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கு அரசால் கட்டுப்படுத்த முடியாத புலனாய்வுப் பிரிவினரே காரணம். இப்படியானதொரு புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிலும் சுற்றுப்பகுதிகளிலும் செயற்படுகின்றனர்.

இவர்களின் செயற்பாடு ஊடகவியலாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர்கள் போன்றவர்களுக்கு மாத்திரம் ஆபத்தல்ல. அரசுக்கும்தான் ஆபத்து. ஒட்டுமொத்த நாடாளுமன்றத்திற்கே இது ஆபத்து.

இந்தக் கொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்தக் கொலைகாரக் கும்பல் உடன் கைது செய்யப்படவேண்டும்.

இந்த அரசாங்கம், ஊடகவியலாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியாளர்கள் ஆகியோரை மாத்திரமின்றி நீதிமன்றத்தையும் அச்சுறுத்துகின்றது. (16 ஆம் பக்கம் பார்க்க)




'த சண்டேலீடர்' ஆங்கில வார ஏட்டின் பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலையைக் கண்டித்து நேற்று லேக் ஹவுஸுக்கு முன்னால் பெரும் கண்டன ஆர்ப்பட்டம் ஒன்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற மார்கழி திருவாதிரை உற்சவப் பஞ்சரதப் பவனியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. 1. தேர்ப்பவனி நடைபெறுகின்றது, 2. நடராஜப்பெருமான் தேருக்கு எழுந்தருளுகிறார்., 3. தேர் திருவிழாவுக்கு திரண்ட பக்தர்களில் ஒரு பகுதியினர். (படங்கள்: தர்னிகா)


## தவறிவிட்டது

காப்பு ஒன்று ஜனசக்தி இன்சூரன்ஸ் அலுவலகத்துக்கு சமீபமாக இருந்து வைத்தீஸ் வராச் சந்தி ஊடாக நாவலர் வீதி, பிறவுண் வீதியில் கலட்டிச் சந்திக்கு அண்மையில் நேற்று (09.01.2009) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஸ்வர்ணம்' இல. 26/15, வளாக வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.இ. 021 222 7081

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 10.01.09 விநியோகிக்கப்படும். பதிவு களை மேற்கொள்ளவும்.

ராஜீவ்,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.


# சீனி, அரிசி, கோதுமை மா பங்கீட்டு அடிப்படையில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன.10

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள சீனி, சிவப்பு நாட்டரிசி, சம்பா அரிசி, கோதுமை மா ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படவிருக்கின்றன.

ஒரு கிலோ சீனி 74 ரூபா 50 சதமாகவும், ஒருகிலோ சிவப்பு நாட்டரிசி 79 ரூபா 50 சதமாகவும், ஒருகிலோ சம்பா அரிசி 86 ரூபா 50 சதமாகவும் ஒரு கிலோ கோதுமை மா 72 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை உடனடியாக செயலகத்தில் பெற்று விநியோகத்தை மேற்கொள்ளும் படி அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

## நாச்சிக்குடா மேற்கில் ஷெல் வீச்சு; ஒருவர் பலி

விசுவமடு, ஜன.10

நாச்சிக்குடாப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்டுள்ள ஷெல் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலியானார்.

நாச்சிக்குடா மேற்கைச் சேர்ந்த வட்டன் சின்னராசா (வயது-60) என்பவர் மாடு மேய்த்துக் கொண்டிருந்த வேளை ஷெல்லில் அகப்பட்டு அந்த இடத்தில் மரணமானார்.

இதே வேளை தொடர்ச்சியாக நடைபெற்ற ஷெல் வீச்சில் நாச்சிக்குடா மேற்கைச் சேர்ந்த மற்றும் பலரும் காயமுற்று தருமபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-358)

## குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ்.நகரில் சுடப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜன.10

கொட்டடி, சீனிவாசகம் வீதியில் நேற்று மாலை 4 மணியளவில் நடைபாதை வியாபாரியான குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுத தாரிகளினால் சுடப்பட்டார். கடும் காயங்களுக்கு ஆளான அவர் யாழ். ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐந்து சந்தியைச் சேர்ந்த கே.சிவானந்தன் (வயது-37) என்பவரே சூட்டுக்கு இலக்கானார்.

வீதியால் சென்றுகொண்டிருந்த அவரை வழிமறித்த ஆயுததாரிகள் அவரை சுட்டு விட்டு தப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் எட்டுப் பிள்ளைகளின் தந்தை ஆவார். (அ-25)

## தீக்குச்சியிலிருந்து பாய்ந்த தீப்பொறி மூதாட்டிக்கு எமனாக மாறியது

யாழ்ப்பாணம், ஜன.10

தீக்குச்சியிலிருந்து பாய்ந்த தீப்பொறி மூதாட்டி ஒருவரின் உயிரைக் குடித்ததாகக் கூறப்படும் சம்பவம் நேற்று முன்தினம் சரசாலை வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் மாணிக்கம் (வயது-90) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த புதன்கிழமை இரவு வீட்டில் தனித்திருந்த வேளையில் மின்சாரம் தடைப்பட்ட போது விளக்கு எரிப்பதற்காக தீப்பெட்டியில் குச்சிகளை உராய்ந்த போது அதிலிருந்து பாய்ந்ததாகக் கூறப்படும் தீப்பொறி மூதாட்டியின் சேலையில் வீழ்ந்து தீப்பற்றிக் கொண்டதில் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் பிற்பகல் மரணமானார்.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். விசாரணைகளை நீதிவான் மேற்கொண்டுள்ளார். (01-207)

## கேள்வி அறிவித்தல் - இல - 01

### கட்டடங்கள் திணைக்களம் வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்

01. செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேச ஸ்தாபனத்திடம் இருந்து சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் அவர்கள் கீழ்வரும் வேலைகளுக்காக நன்கொடை ஒன்றைப் பெற்றுள்ளார்.

02. பிராந்தியப் பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம் சார்பாக தலைவர்,பிராந்திய கேள்விச் சபை / பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வடக்கு மாகாணம்), யாழ்ப்பாணம் அவர்களால் தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர்களிடம் இருந்தும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்வரும் வேலைகளுக்கான மூடிய கேள்விகள் 10.02.2009 பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல | ஒப்பந்தக் குறியீட்டு இல | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் தரம் | வேலைக்கான மதிப்பீட்டு ரூபா | கேள்வி பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/CE/HS/01/2009 | மருந்துக் களஞ்சியம் நிர்மாணித்தல் | M7/C8 | 2.69Mn | 32,300.00 | 1,000.00 |
| 02. | JF/BD/CE/HS/02/2009 | வெளிநோயாளர் பிரிவு கட்டடம் புனரமைத்தல் | M7/C8 | 2.72Mn | 32,700.00 | 1,000.00 |
| 03. | JF/BD/CE/HS/03/2009 | ஆண்கள் விடுதி புனரமைத்தல் (கட்டடத் தொகுதி E) | M7/C8 | 2.64Mn | 31,700.00 | 1,000.00 |

03. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்வி தாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
   - I) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைகொண்டிருத்தல் வேண்டும்.
   - II) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - III) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
   - IV) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெறமுன்னர் ஒப்படைக்க வேண்டும்.
   - V) கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்

04. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணம் (தொ.இ.021 222 2634) பரிசீலிக்க முடியும்.

05. கேள்வி ஆவணங்களை 12.01.2009 தொடக்கம் 06.02.2009 பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

06. மூடிய கேள்விகளை தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10.02.2009 பி.ப. 2 மணிக்கு முன்பாக அனுப்பிவைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

07. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்தச் செலவீனங்களுக்கும் தொழில் தருனர் பொறுப்பேற்க மாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், (வ.மா),
யாழ்ப்பாணம்.

எந்திரி. க.குகநேசன்
தலைவர், பிராந்திய கேள்வி சபை/
பிராந்திய பொறியியலாளர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா பத்மதேவா



அன்பான இயேசு ஜீவகீதங்கள்புகழ் பாடகர் சுவிஷேசகர், சகோதரன் நடராஜா பத்மதேவா 07.01.2009 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

இவர் நடராஜா - இராசலட்சுமியின் அன்பு மகனும் அமரர் கல்யாணியின் அன்புக் கணவரும் சரண்யாவின் பாசமிகு தந்தையும் லிங்கேஸ்வரி, பத்மராஜா, சிவனேஸ்வரி, சந்திரேஸ்வரி, பத்மசேகரா, பத்மசூரியா, பத்மசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரசேகரன், சுசீலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.01.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் எக்காளத் தொனிசபை ஊடாக நடைபெற்று தாவடி கல்வாரி சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியக்காரர்கள் விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல்:
அன்பு மகள் P.சரண்யா.

### Dr.K.திருநாதன்

பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி திருநாதன் (05.01.2009) திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-வரோதயம் தம்பதியினரின் அன்பு மகனும் காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த சண்முகம், சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும், சுதர்சன், அனுராதா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜராஜன், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் நித்தியானந்தன், திருமலர்,ரவீந்திரன், சாந்தமலர், ஜெயமலர், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசீலன், வேணி, தங்கவேலு, உமாபதி, தியாகராசா, விவேகானந்தராசா, உலகேஸ்வரி, உருக்குமணி, நித்தியானந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு லண்டனில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

90/4 கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச.தியாகராசா (மைத்துனர்)




கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்
விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்
கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு
சிறிலங்கா இன்சூரன்ஸ்
MAK Cost Cutter Super Market
உடன் இணைந்து நடாத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா
18.12.2008 முதல் 18.01.2009 வரை
என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை
பொங்கல் வரை
உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்
(நிபந்தனைகளிற்குட்பட்டது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தப் பயங்கரவாதிகள் யார்?

மகாராஜா குழுமத்தின் எம்.ரி.வி, எம்.பி.ஸி. ஊடக வலையமைப்பின் பன்னிப்பிட்டிய, தெபானம கலையகத்தின் மீது அராஜகத் தாக்குதல் நடத்திய சுமார் இருபது பேர் கொண்ட குழு, அங்கு கிளைமோர்க் குண்டு ஒன்றையும் கூட வெடிக்க வைத்திருக்கின்றது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

நாம் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியமை போல தலைநகரிலும் சுற்றுப்புறங்களிலும் வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி, சோதனைச் சாவடிகள், வழி மறிப்புத் துருவல்கள் என்று தொடரும் அதீத கெடுபிடிகளுக்கு மத்தியில்தான் சுமார் இருபது பேர் கொண்ட அராஜகக் கும்பல் ஒன்று இயந்திரத் துப்பாக்கிகள், கிரனேற்றுகள், கிளைமோர்கள் சகிதம் இந்தக் கலையகத்துக்குள் நுழைந்து, சுமார் இருபது நிமிட நேரம் ஆறுதலாக அங்கு தங்கி நின்று, அதிரவைக்கும் வெடிகுண்டுச் சத்தங்களோடு, 'திருவிழா' நடத்திவிட்டு சாவகாசமாக வெளியேறி, பாதுகாப்பாகத் தப்பிச் சென்றிருக்கிறது. யாரும் மறிக்கவுமில்லை;வழமைபோல எந்துப் பாதுகாப்புச் சாவடியிலும் அக்குழு எத்துப்படவுமில்லை.

அதேபோன்றுதான் 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவைச் சுட்டுக் கொன்ற கொலைகாரக் குழுவும் தனது கைவரிசையைக் காட்டிவிட்டுப் பாதுகாப்பாகத் திரும்பிச் சென்றிருக்கின்றது.

நான்கு மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கிகள், இரும்புக் கம்பிகள் சகிதம் லஸந்த விக்கிரமதுங்கவின் காரைப் பட்டப் பகல் வேளையில் - நட்ட நடு வீதியில் - அதுவும் விமானப்படையினரின் தடை நிலையிலிருந்து சில நூறு மீற்றர் தொலைவில் வைத்து - வழி மறித்து, காரின் கண்ணாடியை அடித்து நொறுக்கியும், துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் தனது கைவரிசையைக் காட்டிவிட்டு வெ(ற்)றியுடன் தப்பியிருக்கின்றது கொலையாளிகள் குழு. இவர்களும் எங்கும் வழிமறிக்கப்படவுமில்லை; தடுக்கப்படவுமில்லை.

தலைநகரில் தமது தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏற்பாடுகள் காரணமாக கொழும்பில் தாக்கு தல் நடத்த முடியாமல் புலிகள் முடக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று அரசுத் தரப்பில் கூறப்படுகின்றது. கொழும்பில் புலிகளின் தாக்குதல்கள் குறைந்தமைக்கு தமது பந்தோபஸ்துச் செயல் சிறப்பே காரணம் எனப் பாதுகாப்புத் துறையினர் அவ்வப்போது தங்களுக்குத் தாங்களே புகழாரம் சூட்டிக் கொள்ளத் தவறுவதில்லை. அது அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்.

இதேவேளை, மகாராஜா குழுமத்தின் தெபானம கலையகம் மீதான அராஜகத் தாக்குதலுக்கும், 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் குற்றச்சாட்டு விரலை யாரும் புலிகள் பக்கம் திருப்பவில்லை.

அப்படியானால் -

'ஈவிரக்கமற்ற பயங்கரவாதக்குழு' எனத் தென்னிலங்கையால் விமர்சிக்கப்படும் புலிகள் அமைப்பால் கூடக் கொழும்பில் தாக்குதல்களை நடத்த முடியாத அளவுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கத்தக்கதாக -

சுமார் இருபது பேர் கொண்ட குழு, இயந்திரத் துப்பாக்கிகள், கிரனேற்றுகளுடன் தலைநகரில் கிளைமோர்த் தாக்குதலை நடத்திவிட்டு சாவகாசமாகவும், விமானப்படைத் தடை நிலைக்குப் பக்கத்தில் வைத்து பட்டப்பகலில் - நட்ட நடு வீதியில் ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியரை வழிமறித்துச் சுட்டுக்கொன்று விட்டு பிறிதொரு குழு ஆறுதலாகவும் செல்ல முடியுமானால் -

புலிகளை விட மோசமான பயங்கரவாதக் கட்டமைப்பு ஒன்று தென்னிலங்கையில் செயற்படுகின்றது என்பதுதானே அர்த்தம் .......?

அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கிலும், கிழக்கிலும் மற்றும் பிற சில இடங்களிலும் கூட தினசரி படுகொலைகள், ஆள்கடத்தல்கள், பலவந்தமாகக் கடத்தி காணாமற்போகச் செய்தல் போன்ற அராஜகங்கள் தொடர்ந்து அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் 'புலிப் பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதத்தால் வெல்லுதல்' என்ற கருத்தியல் விந்தையின் - வித்தையின்- அடிப்படையில் அக் கொடூரங்களை நீதியின்பாற்பட்ட செயலாக விழுங்கிக்கொண்டு பார்த்திருக்கின்றது தென்னிலங்கை உட்பட்ட வெளியுலகு.

ஆனால் 'பயங்கரவாதக் கட்டமைப்புகளின்' பாணியில் ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழும் இந்த அராஜகங்களை தெற்கும் சர்வதேசமும் எப்படி நியாயப்படுத்தி சகித்துக்கொள்ளப் போகின்றன ? எந்தக் கருத்தியல் கோணங்கித்தனத்தின் கீழ் அது சகித்துக் கொள்ளப்படக்கூடும்?

தெற்கில் இடம்பெறும் தாக்குதல்களை அதற்கான பாணியை வைத்தே அது புலிகளின் கைவரிசை என்று சந்தேகத்துக்கு இடமின்றி அடையாளப்படுத்தி விடும் கொழும்புக்கு, இப்போது ஊடகங்களுக்கு எதிரான இந்த - மோசமான - இரண்டு தாக்குதல்களினதும் சூத்திரதாரிகளான 'பயங்கரவாதிகளை' இலகுவில் அடையாளம் காணமுடியாமல் போனமை - அல்லது அடையாளம் காண முடியவில்லை என்ற பாணியில் கருத்து வெளிப்படுத்தும் நிலைக்கு அவை போனமை - ஏன் என்பது புரியாத ஒன்று தான்!

# நெடுந்தீவுக்கான குமுதினிப் படகுச் சேவை இப்போதைக்குச் சாத்தியமில்லை

## திருத்த வேலைக்கு உதிரிப்பாகங்கள் இல்லாமையால்

யாழ்ப்பாணம்,ஜன.10

நெடுந்தீவுத் துறைமுகத்தில் திருத்த வேலைகளுக்காகத் தரித்து நிற்கும் அரச படகான குமுதினியின் திருத்தப் பணிகள் இப்போதைக்கு நடைபெறாது. இதனால் இதன் சேவையும் இப்போதைக்கு சாத்தியமில்லை எனக் கூறப்படுகின்றது.

அதற்குத் தேவையான உதிரிப் பாகங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்றும் கொழும்பில் இருந்தே தருவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு-குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரச படகான குமுதினி மீண்டும் பழுதடைந்தது. கடந்த வாரம் இப்படகின் சுக்கான் சங்கிலி அறுந்ததில் சேவையை நிறுத்திக் கொண்டது. அது பின்னர் திருத்தப்பட்டுள்ள போதும் 'கிளச் பிளேட்' உடைந்துள்ளதாகக் கூறப்பட்டு திருத்த வேலைகளை எதிர்நோக்கியவாறு நெடுந்தீவுதுறைமுகத்தில் தரித்து நிற்கின்றது.

உடைந்துள்ள உதிரிப்பாகம் யாழ்ப்பாணத்தில் இல்லை எனவும் கொழும்பில் இருந்து தருவிக்க வேண்டியுள்ளதாகவும் சொல்லப்படும் நிலையில் குமுதினி மீண்டும் தனது சேவையை உடனடியாக ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரச படகுச் சேவை அடிக்கடி இயந்திரக் கோளாறு என்று கூறி சேவையை நிறுத்திக் கொள்வது சகஜமாகியுள்ளது. நெடுந்தீவு மக்கள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் தமது பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். அதனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை இதுகுறித்து சிரத்தை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோருகின்றனர். (202-111)

# விஞ்ஞானதினவிழா

நல்லூர் பிரதேச செயலகத்தின் 'விதாதா' வள நிலையம் நடத்தும் விஞ்ஞான தின பரிசளிப்பு விழா நாளை மறுதினம் தி[illegible]கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் பிர்தேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியற்றுறைத் தலைவர் கலாநிதி கு.மிகுந்தனும் கௌரவ விருந்தினராகக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸும் கலந்து கொள்வர். (202)

# தைப்பொங்கல் பண்டிகையையொட்டி புற்றுநோயாளர்களுக்குச் சத்துணவு

யாழ்ப்பாணம், ஜன.10

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டப் புற்றுநோயாளர்களுக்கு சத்துணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை யாழ்.போதனா வைத்தியசாலையின் 26ஆம் இலக்க விடுதியில் வைத்து இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கமும் சர்வதேச சுகாதார வைத்திய அமைப்பினரும் இணைந்து இந்தப் பொருள்களை வழங்குவதற்கென நிதியுதவி அளித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை 8 மணிக்குப் புற்றுநோயாளர்கள் அனைவரையும் தமது நோயாளர் பதிவுப் புத்தகத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் 26ஆம் இலக்க விடுதிக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# செலான் வங்கி தனது வழமையான சேவைகளை உறுதியுடனும் சுயாதீனமாகவும் மீண்டும் வழங்குகிறது

கொழும்பு,ஜன.10

செலான் வங்கி தனது வழமையான சேவைகளை உறுதியுடனும் சுயாதீனமாகவும் மீளவும் வழங்கத் தொடங்கியிருக்கின்றது.

மத்திய வங்கியின் நிதிக் குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கை வங்கி நியமித்த சுயாதீன பணிப்பாளர் சபையின் செயற்பாட்டில் செலான் வங்கி மீண்டும் எழுச்சியுடனும் உறுதியுடனும் செயற்படத் தொடங்கியுள்ளது.

மத்திய வங்கியின் நேரடி ஆதரவில் செலான் வங்கியின் வங்கிச் சேவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நுகர்வோர் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன் புத்தாண்டில் திறமையுடன் முன்னேற வங்கி திட்டமிட்டுள்ளது.

வைப்புக்களுக்கு கவர்ச்சியான வட்டிகளை வழங்கவும் விசுவாசமிக்க தமது உறுப்பினர்களுக்கு இதய பூர்வமான சேவைகளை வழங்கவும் வங்கி தீர்மானித்துள்ளது.

வங்கியின் புதிய பணிப்பாளர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஈஸ்ட்மன் நாராங்கொட (தலைவர்), பிரபல வங்கியாளர் நிகால் ஜயமன்ன (பணிப்பாளர்), ஜனாதிபதி சட்டத்தரணி லலித் விதான (பணிப்பாளர்), பட்டயக் கணக்காளர் நவோமல் குணவர்த்தன (பணிப்பாளர்), பட்டயக் கணக்காளர், சட்டத்தரணி ஆர்.நடராஜா (பணிப்பாளர்), சிரேஷ்ட வங்கியாளர் றெயார் அட்மிரல் ஆனந்த பீரிஸ் (பணிப்பாளர்). (ப)

# செயலமர்வு

வேலணை,ஜன்.10

தீவக வலயத்தில் தமிழ்பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் தரம் 6-10 வரை தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்துகொள்ளவேண்டும் எனத் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-267)

# உழவர் திருநாளை ஒட்டி உரும்பிராயில் போட்டிகள்

இணுவில், ஜன.10

உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு உரும்பிராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையத்தினர் விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளனர்.

பொங்கல் தினத்தன்று நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் சுவட்டு நிகழ்வாக குறுந்தூர ஓட்டங்களும், நீளம் , உயரம் பாய்தல் போட்டிகளும், குண்டு, தட்டு, ஈட்டி எறிதல் போன்ற போட்டிகளும் கயிறு இழுத்தல், சறுக்கும் கம்பம் ஏறுதல், தலையணை அடி, கண்கட்டி அடித்தல் போன்ற பல போட்டிகளும் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-45)

# மாவட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜன.10

கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம் யாழ். மாவட்ட மட்டத்தில் வீட்டுத்தோட்டப் போட்டியொன்றை நடத்தியிருந்தது.

இப் போட்டியில் 15 பேர் வெற்றியீட்டியிருந்தனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்டச் செயலகக் கூட்ட மண்டபத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**தனியார் வீட்டுத்தோட்டப் போட்டி**

இ.சுதர்சினி (தாவளை, இயற்றாலை), கி.சாந்தகிருஷ்ணன் (மானிப்பாய்), என்.கனகலிங்கம் (கொக்குவில்).

**பாடசாலைத் தோட்டப் போட்டி**

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**பாடசாலை மாணவர் வீட்டுத்தோட்டப் போட்டி**

எஸ்.சுலோஜனா (நாயன்மார்கட்டு), ரி.அகில்செல்வன் (நெடுந்தீவு), த.திருக்குமரன் (கோப்பாய்).

**அலுவலகத் தோட்டப் போட்டி**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், சங்கானை பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை.

**அலுவலரின் உத்தியோகபூர்வ வதிவிடத் தோட்டப் போட்டி**

பி.சிறிகாந்தன் (பிரதேசசபை, வேலணை), எஸ்.பிரதாபராஜன் (இலங்கை போக்குவரத்துச்சபை, கோண்டாவில்), திருமதி உ.விஜயராணி (பதில் நீதிவான், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை). (202)

# நிவாரணப் பொருள்கள் தரமற்றதாயின் சமூக சேவைகள் அமைச்சுக்கு முறையிடுக

யாழ்ப்பாணம், ஜன.10

பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருள்கள் தரமற்றதாக இருப்பின் அது தொடர்பாக உடன் தமக்கு அறிவிக்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணிக்குழுவின் தலைவருமாகிய கே.என்.டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாகச் சமூக சேவைகள் அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

குடாநாட்டில் நிவாரணமாக வழங்கப்படுகின்ற உணவுப்பொருள்கள் சுத்தமானதாகவும் தரமானதாகவும் இருப்பது அவசியம். தரமான உணவுப் பொருள்களே அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றன. மிகவும் பழுதடைந்த உணவுப் பொருள்கள் தங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக பலர் தெரிவித்துள்ளனர்.

எனவே நிவாரணப் பொருள்களை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அனைவரும் இதனை உணர்ந்து செயற்படவேண்டும். எந்த இடத்திலாவது தரமற்ற, நிறைகுறைந்த உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டால் அது தொடர்பாக அமைச்சரின் யாழ் அலுவலகத்திலும் 2229824 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 27 | 11.01.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பூரணை |
| | மு.ப.10.17வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | [illegible]08.53வரை |
| [illegible] | 09.33 - 11.03 |
| ராகுகாலம்: | 05.03 - 06.33 |

# நல்லூர் பிரதேச குடும்பங்களுக்கு

நல்லூர், ஜன.10

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வீடு, கிணறு, மலசலகூடம் ஆகியவற்றைக் கட்டுபவர்கள் சீமெந்து பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது பிரதேச சபை அல்லது மாநகர சபையின் அனுமதிபெற்ற வரைபடங்களையும், குடும்ப அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும் என பிரதேசசெயலகம் அறிவித்துள்ளது. (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாடு முழுவதும் நாளை பகல் மின்வெட்டு

குடாநாடு முழுவதும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் தடைப்பட்டிக்கும் என்று மின்சாரசபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப் பின்னலில் அவசரத் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காகவே மின் தடை நடைமுறைப்படுத்தப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாவற்குழி தெற்கு, கைதடி கிராமத்தின்
வரலாற்றில் முதல் முதலாக
க.பொ.த.உயர்தரத்தில் கலைத்துறையில்
சாதனை படைத்த மாணவர்களாகிய


நி.கேசாந் 3A


த.தனுராஜ் 3A


ச.ஜனனி 3A


சி.கோபிகா 3A

ஆகியோரை வானுயர வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துவோர்:
நாவற்குழி தெற்கு மக்கள்,
கைதடி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக ஆதரவாளர்
திரு.நா.நித்தியானந்தன் (J.P) பொற்பதி வீதி,
கொக்குவில் அவர்களது அன்புத் தாயார்

**திருமதி அன்னம்மா நாகலிங்கம் (பொன்னடி)**

அவர்கள் 05.01.2009 திங்கட்கிழமை லண்டனில் காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி முன்னேற்றக் கழக நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



இருபாலை, கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய அன்னதானசபை முன்னாள் தலைவரும் கலைமணி சனசமூக நிலையத்தின் போசகருமான

**அமரர் க.நித்தியானந்தன்**

அவர்களின் மறைவு கேட்டு நாம் மிகவும் வேதனை அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தி அடைவதாக
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய அன்னதான சபையினரும்
கலைமணி சனசமூக நிலையத்தினரும்
கட்டப்பிராய், இருபாலை.

## மரண அறிவித்தல்

### வைரவன் இராமர்



கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் இராமர் நேற்று (09.01.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வைரவன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் நாகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்), தர்மலிங்கம், காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் யோகரட்ணம் (பிரான்ஸ்), விஜயகுமாரி, ரவீந்திரன், பவானி (சுவிஸ்), ஜெயக்குமாரி (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்), ஜெயாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் செல்லையா (ஓய்வுபெற்ற உப அதிபர்), சரோஜினிதேவி, சரஸ்வதிதேவி, கிருஸ்ணபேபி, இராசதுரை, பரமேஸ்வரி, கந்தசாமி, தெய்வேந்திரம், குகனேஸ்வரி, தினேஸ்வரஇரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2009) சனிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்கா மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மாணவனைக் காணவில்லை; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.10

ஆனைக்கோட்டை, நாலாம் கட்டையைச் சேர்ந்த மாணவனை கடந்த மாதம் 18 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மரியநாயகம் நிசாந்தன் (வயது 16) என்பவரே காணாமல் போனவராவார். (1-25)

## ஜெயந்தி, பூரணை விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.10

சுவாமி துரியானந்தரின் ஜெயந்தி விழாவும், பூரணை விழாவும் இன்று மாலை 5.30 மணிக்கு தாவடியில் உள்ள ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியில் இடம்பெறவுள்ளன.

பஜனை, விசேட ஆன்மீக உரை, நாமார்ச்சனை என்பன இடம்பெறும். (1)

## யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் கிளைகள் இன்றும் நாளையும் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன.10

பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சகல விற்பனை நிலையங்களும் கூட்டுறவுநகர் விற்பனை நிலையங்களும் இன்றும் நாளையும் முழுமையாகத் திறந்திருக்கும் என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் அறிவித்துள்ளார்.

பொங்கல் பொருள்கள் அடங்கிய பொதிகள் மற்றும் விமானம் மூலம் தரு விக்கப்படும் மரக்கறிவகைகளை நுகர்வோருக்கு விநியோகிக்கும் முகமாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-224)

## கவிதை நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜன.10

தமிழ், சிங்கள எழுத்தாளர் கவிஞர் இப்னு அஸூமத் எழுதிய இனந் தெரியாதவர் கள் என்னும் கவிதை நூல் அறிமுக விழா இன்று சனிக் கிழமை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். (1)


### வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் றக்கா லேனில்
1 ½ பரப்புக் காணியில் மாடித்
தளத்துடன் அமைந்துள்ள வீடு
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: பரமேஸ்வரி,
395/4 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6853

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள கார்
(NISSAN SUNNY) விற்பனைக்குண்டு.
தொடர்பு:- இல.23, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 9467, 222 3871

### ஒத்துமாறல்

ஸ்ரீ இராமபுரம் வவுனியாவில் கற்பிக்கின்ற பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார். விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். இல.126,சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6047

### கணித வகுப்புகள்

ஆண்டு 8 தொடக்கம் ஆண்டு 11
வரையான பிரத்தியேக வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
குறிப்பு: வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்
இல.126, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6047

**தவறிவிட்டது** சரவணை கிழக்கு - 09 என்னும் முகவரியுடைய தேவராஜா பாக்கியலட்சுமி என்பவரின் தே.அ.அ. (507592759V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

### தவறிவிட்டது

நுணாவிலுக்கும் யாழ். ஒட்டுமடம் சந்திக்குமிடையில் மோட்டார் சைக்கிளில் சென்றவேளையில் இரண்டு பவுண் நிறையுடைய சங்கிலியும் பென்ரனும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சசிக்குமார் ஜெயந்தி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி [illegible] தொ.பேசி இல. 060 222 6029, 0771263496 ஆகியவற்றுடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14.02.1932
மறைவு: 24.12.2007

**முத்து பாக்கியம்**

திதி: சதுர்த்தசி (10.01.2009)

அம்மா! ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன
அம்மா என்று சொல்ல எமக்கு யாருமில்லையே
சொத்து இருந்தென்ன சுகம் இருந்தென்ன
உயர்வுக்கு வழிகாட்ட இன்று நீங்கள் இல்லையே!
ஆண்டு ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுடன் ஒற்றுமையாய்
வாழ்வோம் அம்மா...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இலட்சுமி இல்லம்,
1 ஆம் ஒழுங்கை, அரசடி, நல்லூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## நன்றி நவிலலும் வாழ்த்தும்



அருள்மிகு ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலயத்திற்கு சேரவேண்டிய ஸ்ரீ நாகபூசணி அம்பாள் எழுந்தருளியையும் சிறு தொகைப் பணத்தையும் எமக்குப் பெற்றுத் தந்தமைக்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாண செயலணித் தலைவருமான கௌரவ திரு. K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு. S.A.உதயன், பிரதி அமைப்பாளர் சூசைப்பிள்ளை அலெக்சாண்டர் (சாள்ஸ்) உறுப்பினர்கள் கனகசபை நடராசா, அம்பலம் ரஜீத்திரதாசன் (அகில இலங்கை சமாதான நீதவான்) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு மேன்மேலும் அவர்களது பணி சிறந்து பிரகாசிக்க ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் அனைவரும் ஸ்ரீ கௌரி அம்பாள் அருள்பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலய நிர்வாகம்.

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் மனோன்மணி



கரப்பிட்டியன்தனை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது இல.370, மானிப்பாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் மனோன்மணி நேற்று (09.01.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு வாத்தியார் தம்பதியினரின் இரண்டாவது மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை (அப்பாபிள்ளை) தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் முத்துராசா, நிர்மலாதேவி, விஜயரத்தினம் (கொழும்பு), பத்மினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

370, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### ஆறுமுகம் சாம்பசிவம்

(பாடசாலை கட்டிட ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்
**School Works Overseer & Technical Officer**)

அல்லையம்பதி, துன்னாலையைச் சேர்ந்த ஆறுமுகம் சாம்பசிவம் நேற்று (09.01.2009) வெள்ளிக் கிழமை காலையில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் பரிபூரணத்தின் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு (ஓய்வூதியர், தொழில் திணைக்களம்), வசந்தகுமாரி, நிர்மலாதேவி, குமுதினி (அமரர்), குகனேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரமலர், பாலச்சந்திரன் (அமரர்), ஜீவா (மத்திய கல்லூரி, ஓமந்தை), விநோதினி (லண்டன்), சுந்தரேசன் (லண்டன்), சியாமளா (பிரான்ஸ்), தீனதயாளன் (பிரதேசசபை, திருமலை), திவாகரன் (விரிவுரையாளர், கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தியாகராசா (ஓய்வுபெற்ற தொழில் அதிகாரி, லண்டன்), சிங்காரம் (வானிலை அவதான நிலைய ஓய்வுபெற்ற அதிகாரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜனனி, பிரசன்னா, பிருந்தா, வைஸ்ணவி (லண்டன்), அபிராமி (பிரான்ஸ்), அர்ச்சனா (பிரான்ஸ்), ஆதித்தன், ஆதர்சனி, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.01.2009) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.30 மணியளவில் கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லையம்பதி,
துன்னாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.அலுவலகத்திற்கான மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்து மாமன்றத்தின் நுழைவாயிலை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திறந்து வைப்பதையும் மன்றக் கட் டடத்தை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வீ.கைலாசபிள்ளை தம்பதிகள் திறந்து வைப் பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். முதலாவது படத்தில் அரச அதிபர் கே. கணேஸ், துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்ட பாணிக தேசிகர் ஆகியோரும் அருகில் உள்ளனர்.

இந்து ஆராய்ச்சி நூலக மண்டபத்தை இந்து மாமன்றச் செயலாளர் க.நீலகண்டன் தம்பதியினர் திறந்த வைப்பதையும் பயிற்சி மண்டபத்தை ரிஷி தொண்டுநாத சுவாமிகள் திறந்து வைப்பதை அடுத்த இரண்டு படங் களிலும் காணலாம்.

விழாவிற்கு சமுகமளித்தவர்களில் ஒரு பகுதியினரை ஐந்தாவது படத்தில் உள்ளனர்.

(படங்கள்:லக்ஸ்மன்)

## சண்டிலிப்பாய் செயலகத்தில் தோட்டச் செய்கைக்கு மீள ஆயத்தம்

நவாலி, ஜன.10

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நிஷா புயல், பெருமழை என்பவற்றால் அழிந்துபோன மரக்கறித் தோட்டத்தை மீள் நடுகை செய்வதற்கு செயலக ஊழியர்கள் அனைவரும் செயலக வளவை சிரமதான மூலம் பண்படுத்தி வருகின்றனர்.

இங்கு மரக்கறித் தோட்டம், பழத் தோட்டம், மூலிகைத்தோட்டம் என்பவை செய்கை பண்ணப்படவுள்ளன என பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மரக்கறித் தோட்ட செய்கையில் மாவட்ட மட்டத்தில் இப்பிரதேச செயலகம் முதலாம் இடத்தை பெற்றது. மானிப்பாய் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த சாந்தா பாலகிருஷ்ணன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

(202-100)

## மனிதனின் இன்றைய துன்ப, துயரங்கள் நீங்க ஆன்மீகம் சமூக மயமாக வேண்டியது அவசியம்

### இந்து மாமன்றக் கட்டடத் திறப்பு விழாவில் நீதிபதி விக்னராசா

யாழ்ப்பாணம்,ஜன.10

மனிதனின் துன்ப துயரங்கள் நீங்குவதற்கு ஆன்மீகம் சமூக மயமாக வேண்டும். எமது சமயத்தை தத்துவ நிலையிலிருந்து நடைமுறை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டு வந்து, ஆன்மீகம் சமய வாழ்வில் வெளிப்பட அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது இன்றைய தேவையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா.

யாழ்ப்பாணம் இந்து மாமன்ற மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள் இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறிஸ்துவ சமயத்தின் மதமாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர்.

ஆனால், 'முழு உலகுக்கும் ஒளியாய் இருக்கும் இந்து சமயத்தைச் சேர்ந்தவன் என்பதனால் பூரிப்படைகிறேன்' என பெருமையுடன் சிக்காக்கோவில் சிலாகித்த சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தை தனித்துவப்படுத்திக் காட்டுவன அதன் சகிப்புத் தன்மையும், சுய விமர்சன சுதந்திரமும் ஆகும் என்ற அவரின் அணுகுமுறை வித்தியாசமானது. அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால் இந்து மதம் பிற மதங்களுக்குத் தாழ்வானது அன்று என்பது விளக்கமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியதும் என்பதும் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்கப்பட்டது.

மதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எதுவித ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. ஒவ்வொரு மதத்தவனும் தனது மதத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கடப்பாடு இருக்கிறது. எந்த மதத்தையும் பின்பற்றவோ வழிபடவோ எவருக்கும் சுதந்திரம் உண்டு. எல்லா மதங்களையும் அங்கீகரிக்கின்ற, மதிக்கின்ற தன்மை எல்லா மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் அவசியம். ஆனால் ஒரு மதத்தின் தனித்துவங்களை விட்டுக் கொடுக்கும் அளவிற்கு பெருந்தன்மை அவசிய மற்றது. தத்தமது மதங்களைப் பின் பற்றி பாதுகாக்கும் அதேவேளையில் மற்றமதங் களைத் தாழ்த்தாமல், கண்டிக்காமல் அந்த மதத்தவர்களுக்கு ஊறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.



**மதங்கள் வாழ்வின் வழிகாட்டியும் ஒளிவிளக்குமாகும்.**

எல்லா மதங்களுமே அன்பையும், பாசத்தையும், பண்பையுமே போதிக்கின்றன. அத்துடன் நல்லவற்றைச் செய்யவும் தீயவற்றை தவிர்க்கவும் மதமானது ஒரு வழிகாட்டியாக ஒளி விளக்காக உதவுகின்றது.

மனிதனை மனிதத் தன்மையோடு கூடிய மனிதனாக உருவாக்குவது கல்வி என்று மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து சிந்திக்கப்பட்டு வந்தது. கல்வியின் ஆரம்பம் சமயக் கல்வியாக, ஒழுக்கக் கல்வியாக, அறநெறிக் கல்வியாக இருந்தமையை கல்வி வரலாறு குறிப்பிடுகின்றது. கல்வியை வழங்கி வந்த ஆசான்கள் யாவரும் சமய அறிஞர்கள், அருளாளர்கள், சமயச் சான்றோர்களாகவே விளங்கினார்கள்.

மனிதனின் உலகியல் வாழ்க்கையை ஆன்மீகம், தெய்வீகம், பரிபூரணம் நிறைந்ததாக நெறிப்படுத்துவது சமயமும் கல்வியுமாகும். உலகில் வாழ்வாங்கு வாழ்தல், நல்லவண்ணம் வாழ்தல், மனிதத்தன்மைகளோடு வாழ்தல் என்பன உலகியலுடன் ஆன்மீகமும் கலக்கும் போதே எய்தப்படுகின்றன.

தற்கால கல்வி முறையில் ஆன்மீகம், மானுடம், விழுமியம் என்பன நழுவப்பட்டு வருவதையும், வேறுபல உலகியல் நோக்கங்கள் இடம் பெற்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. பாடசாலையில் வழங்கப்படும் சமயக்கல்வியில் கூட இதே நிலைமை காணப்படுகின்றது.

மானுட நேயம், கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், இறை நம்பிக்கை, பெற்றோர் பெரியோர், மூத்தோர் ஆகியோரை மதித்தல், பிறர் நலம் பேணுதல், உண்மை, நீதி, அமைதி, நல்லொழுக்கம், அகிம்சை

(15 பக்கம் பார்க்க)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்ப்பாண பொருளியலாளர் சங்கத்தின் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி அபிவிருத்திக் கற்கைநெறி முதலாம் அணி மாணவர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

* * *

நவாலி,ஜன.10

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவின் முதியோர் சங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை தலைவர் செ.மகேந்திரன் தலைமையில் நவாலி கிழக்கு பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-100)

* * *

நவாலி,ஜன.10

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

விவசாயக் குழுக் கூட்டம் 10 மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 11 மணிக்கும் இடம்பெறுமென்று தெரிவிக்கப்படுகிறது. (202-100)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.10

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோயில், சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தி யாலயத்தில் நடைபெறவுள்ளது. (204)

* * *

சித்தங்கேணி,ஜன.10

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-112)

* * *

கெருடாவில்,ஜன.10

கெருடாவில் தெற்கு வாழ்வாதார முன்னேற்றச் சங்கத்தின் அங்குரார்ப்பண்க் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கெருடாவில் கொலனிப் பொது மண்டபத்தில் லயன் க.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (253)

## சிவத்தமிழ் செல்வியின் பிறந்த தின அறநிதியாக போதனா வைத்தியசாலைக்கு ரூபா ஒரு லட்சம்

யாழ்ப்பாணம்,ஜன.10

சிவத்தமிழ் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் 84 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அறக்கட்டளைச் சபையினர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கென ஒரு லட்சம் ரூபாவை உதவி நிதியாக வழங்கியுள்ளனர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற 84 ஆவது பிறந்த [illegible] உதவிக்கான காசோலையை தேவஸ்தானதின் செயலாளர் சி.சண்முகநாதன் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.தேவநேசனிடம் கையளித்தார்.


மாணவர்களின் கல்வி நிதியான 2 லட்சம் ரூபாவுக்கான காசோலையை தேவஸ்தான பொருளாளர் நா.தவநாதன் யாழ். வலயக் கல்விப் பணிபாளர் திருமதி அ.வேதநாயகத்திடம் கையளித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கென நீரிறைக்கும் இயந்திரத்தை தேவஸ்தானமும் வைத்தியசாலைக்கான [illegible] உபகரணங்கள் சிலவற்றை தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றத்தினரும் கையளித்தனர். (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனன தின நினைவும் மண்டபத் திறப்பு விழாவும்

## 'மகேஸ்வரன் தருமசுரபி'



யாழ்., கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைச்சருமான "இறைபணிச்செம்மல்"

## மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன்

அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள

## "மகேஸ்வரன் தருமசுரபி"

மண்டபத்தை அன்னாரது பிறந்த தினமான இன்று சிவத்தமிழ்வித்தகர், கலாநிதி, முதறிஞர், பண்டிதமணி க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆசீர்வதித்து திறந்து வைக்கிறார்.

**இடம் : மணற்காடு முத்துமாரி அம்மன் கோவில்**

**நாள் : 10-01-2009 (சனிக்கிழமை)**


**நேரம் : காலை 9.00 மணி**

276, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-222 7559

தகவல் :
திருமதி விஜயகலா மகேஸ்வரன், பிள்ளைகள்,
[illegible], சின்னாலடி, தங்கோடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்



கோகுலராகவன்

ஒருநாள் பள்ளியில் எனது வகுப்பில் ஒரு வழக்கு வந்தது. வகுப்பு 8. சிலவேளைகளில் பள்ளியில் விசித்திரமான, வழக்குகளை மாணவர்கள் கொண்டு வருவார்கள். தீர்த்து வைக்கமுடியாததாகவும், சிலவேளைகளில் மனதில் கவலைகளை உண்டு பண்ணுபவையாகவும் அமையலாம்.

இப்படித்தான் ஒருநாள், எனது வகுப்பு மாணவி கவிதா பற்றி வகுப்பு மாணவிகள் முறைப்பாடு ஒன்றை சொன்னார்கள்.

அந்த ஊரில் முதல் இரவு காத்தவராயன் சிந்து நடைக் கூத்து நடந்தது. இந்த மாணவி கவிதா அதில் பாலகாத்தானாக நடித்திருக்கின்றாள். கூத்துக்கு மணிக்கடை, நிறைய வந்திருக்கு. பன்னிரண்டு மணியான பின் மணிக் கடைக்காரர்கள், சாமான்களை தறப்பாளால் மூடிவிட்டு நித்திரையாகிவிட்டார்கள். தனது வேடம் முடிந்தபின் கவிதா இந்த நேரத்தினைச் சாக்காக வைத்து, காப்பு, சீப்பு, விளையாட்டு கார், மாலைகள், சிறிய பிளாஸ்ரிக் கப்புகள் என்று நிறைய பொருள்களைத் திருடிவிட்டாள். பின்னர் அப்பொருள்களை தனக்கு தெரிந்த ஏனைய மாணவர்களுக்கு 10 ரூபா, 20 ரூபா என்று விற்றுவிட்டாள்.

இப்படி 600/- பணம் அவள் கையில் இருந்திருக்கின்றது.

பாடசாலைக்கு வெளியில் நடைபெற்ற சம்பவமாக இருந்தாலும், விசாரிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு இருந்தது.

''கவிதா கோயில் சாமான் களவெடுத்தியா?''

''இல்லை சேர். உவை சும்மா சொல்லுகினம்''

''இல்லை சேர் என்ரை தம்பி உவளிட்டை ஒரு பம்பரம் வாங்கினவன்''

கவிதாவை உறுக்கினேன்.

''சேர் பம்பரம் நான் காசுக்கு வாங்கி பிறகு வித்தனான்''

''எவ்வளவுக்கு வாங்கி வித்தனீர்''

''30 ரூபாவுக்கு வாங்கி 20 ரூபாவுக்கு வித்தனான்''

''சேர் கடையில பம்பரம் 40ரூபாதான் வித்தது.'' இது மற்ற மாணவர்களின் தகவல். கவிதா என்னைச் சுத்துகிறாள் என்று புரிந்தது.

கொஞ்சம் உறுக்கினேன் – பிறகு ஒத்துக்கொண்டாள். ஆயிரம் ரூபா பெறுமானமான பொருள்களைத் திருடி, 600ரூபாவுக்கு விற்றிருக்கின்றாள்.

''எங்கை காசு''

''சேர் உவ எல்லாருக்கும் கச்சான் வாங்கி கொடுத்தவ''

''கொடுத்தனீரா?''

''ஓம்...''

சோமசுந்தரப் புலவர் பாடல் – ''ஓயாத உவர்க்கடல் அள்ளி – இரவலர்க்கு ஈயும் புரவலர் போல'' பாடல் ஞாபகம் வந்தது எனக்கு.

திருட்டுப் பங்கு அதிகரித்துவிட்டது.

''மிச்சக் காசு எங்கே?''

''வீட்டை இருக்கு''

''எடுத்துக்கொண்டு அப்பாவையும் கூட்டிக்கொண்டு வா''

''அப்பா வரமாட்டார்''

''ஏன்?''

''சுகமில்லை''

''என்ன சுகமில்லை?''

''அவருக்கு...'' கொஞ்சம் இழுத்தாள்.

''சொல்லு''

''மூளைக்காய்ச்சல் வந்து'' – எனக்கு யோசனை ஆரம்பித்ததும்,

''வந்து...?''

''இப்ப விசராக்கிப் போட்டுது''

''இப்ப அவர் எங்கே?''

''வீட்டைதான்''

''மருந்தெடுக்கவில்லையா?''

''இல்லை, ஆஸ்பத்திரியில வெளிக்கிட்டு ஓடிவிட்டார். பிறகு தேடிப் பிடிச்சுக்கொண்டு வந்தனாங்கள்''

''பிறகு''

''இப்ப வீட்டை கட்டி வைச்சிருக்கிறம்''

''கட்டியா?''

''ஓம், இல்லாட்டி ஓடிவிடுவார். எங்கட [illegible] அடிப்பார்''

''எத்தனை மாதமா?''

''கனநாளாய் கட்டி வைச்சிருக்கிறம்''

எனது மனோ நிலை மாறிவிட்டது

''அம்மாவைக் கூட்டிக்கொண்டு வா...''

கவிதா தாயையும் கூட்டிக் கொண்டு, காசையும் கொண்டு வந்தாள். 500ரூபாய்த் தாளைப் பதினாறாக மடித்து வைத்திருந்தாள். எனக்கு பெருமூச்சொன்று என்னை அறியாமல் வந்தது.

தாய் அழுதாள். ''அவைட வைச்சுத்தான் சேர் சாப்பாடு போடுறன். என்ரை நிலையை இந்தப் பிள்ளையள் யோசிக்குதுகள் இல்லை''

(யோசித்தபடியால்தான் கவிதா களவெடுத்தாள் என நான் நினைத்துக்கொண்டேன்)

கவிதாவுக்கு அடிக்க எனக்கு மனம் வரவில்லை. அதிபரிடம் அனுப்பிவிட்டேன்.

அதிபர் நிறையப் புத்திமதிகள் கூறி அனுப்பி இருக்கவேண்டும். அவராலும் கடுமையாக நடக்கமுடியவில்லை என்று நினைக்கின்றேன்.

கவிதாவைப் பற்றியும், அவளின் நிலை பற்றியும் மனதில் கேள்விகள் பல எழுந்தன.

கவிதா தந்த 500ரூபாவை அதிபரிடம் கொடுத்தேன்.

அதிபர் கேட்டார்

''இதை என்ன செய்யறது கோகுலன்?''

எனக்கு அதை கவிதாவிடம் கொடுப்பதுதான் இப்போதைக்கு சரி போலப்பட்டது.

ஆனாலும் அது அவளின் அந்த மனோநிலையை வளர்ப்பதாக அமைந்துவிடலாம். தாயிடம் கொடுத்தாலும் அப்பிடித்தான். மணிக்கடைக்காரரை எங்கே தேடிப்பிடிப்பது?

''லைபிறரிக்கு புத்தகம் வாங்குங்கோ''

எனது மனநிலையில்தான் அதிபரும் இருந்திருக்க வேண்டும். மௌனமாக இருந்தார்.

அந்த வருடம் அப்பள்ளியில் இருந்து நான் மாற்றலாகி வந்துவிட வேண்டி இருந்தது.

கவிதாவின் தகப்பன் நல்ல நிலைக்கு மாறினாரா? கவிதா படிக்கக்கூடியவள். படித்தாளா? இப்போதைக்கு எனக்கு எதுவும் தெரியவில்லை.

எமது சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்கள் மாற்றம் அடையாத வரை, இதுபோன்ற பல சம்பவங்களை நான் உங்களுடன் பகிரவேண்டிவரும்.

# பெண் மொழி பேசுவோம்



செ.ரோஷான்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சீதையின் அழகை கம்பன் எவ்வளவு நுட்பமாக வர்ணித்துள்ளான். அந்த நுட்பம், பெண்ணின் நோக்கு எந்தப் பெண்ணுக்காவது வந்துள்ளதா? பெண்ணின் அழகை ஆண்தான் வர்ணிக்கவேண்டுமா? பெண்ணிடம் உள்ள அழகு அவளுக்கு தெரியாதா? இவ்வாறான பின்தங்கலே ஆணாதிக்கத்தை மீண்டும் வளரமெருகூட்டுகிறது எனலாம். இன்றைய காலகட்ட நோக்கில் மெகாசீரியல், சினிமா என்பன கூட ஒரு வகையில் பெண்ணின் உடல், கவர்ச்சி அரசியலைத்தான் வெளிப்படுத்துகின்றன.

ரஷ்யப் புரட்சிக்கு பிறகு உலகத்தைப் புரட்டிப்போடக்கூடிய அடுத்த புரட்சி ''பெண்ணியப் புரட்சி''தான். இது சமூகத்தின் வேரை அடியோடு மாற்றியது. விஞ்ஞானத்தின் பார்வையில் நோக்கிச் சமூகத்தை விழிப்புணர்வுடன் திசை திருப்பியது. உலக மயமாக்கல் சிந்தனையின்போது பல நாடுகள் கலாசார முறைகளை இழந்து நிற்கின்றன. அப்படி இருந்தும் அவை ஆணாதிக்கத்தில்தான் தங்கியிருப்பது ஏன்? இவ்வாறான முக்குழிப்ப நிலைக்குக் காரணம் என்ன?

பெண் ஒருத்தி வயதுக்கு வந்துவிட்டதை ஒரு இம்சையாய் நினைக்கிறோம். இவற்றையெல்லாம் பல முறைகளில் ஆண்தான் காலம்காலமாக எழுதுகிறான். இது உடல் நிலை மாற்றம் தானே. அவள் வயதுக்கு வந்துவிட்டாள் என சமூகமே ஏங்குகிறது. அப்படி ஏங்கும்போதே துளிர்விடுகிறது ஆணாதிக்க சர்வாதிகாரம். பெண் குழந்தை பிறந்தவுடனேயே அவள் பெண்ணாகிறாள் என்று ஏன் சமூகம் சிந்திப்பதில்லை. பிறகு ஏன் உடல் மாற்றத்திற்காகப் புதிதாக ஒரு சொல்? 'பூப்படைதல்' என்று சொல்லி அவளுக்குப் பூட்டு போட்டுக் கொள்கிறார்கள். அந்தப் பெண் தனிமையாகும்போது துளிர்விடும் எண்ணம் வரிகளானால் அது இரத்தம் சொட்டும் வகையிலேயே அமையும்.

இப்படியான தனிமைப்படுத்தலும் ஒருவகை அடக்குமுறைதான். வித்தியாசம் என்னவென்றால் பெண்ணைப் பற்றி ஆண் எழுத அதைக் கொண்டு பெண்கள் பெண்களையே அடக்க முற்படுகிறார்கள். பெண் விடுதலை என்பது ஆணின் துணையோடுதான் நடக்கவேண்டுமா? பெண் தனித்த உயிராக இல்லாமல் சமூக உயிராக இருப்பதனால் சமத்துவம் முக்கியமாக உள்ளது. பெண்மொழி எத்தனை நாளைக்குத்தான் வேதனைகளைச் சொல்வது. கலகத் தன்மை எழுத்தில் விளையவேண்டும். அப்போதுதான் பெண் பற்றிய ஆபாசத் தன்மைக்கும், தவறான எண்ணப் போக்குகளுக்கும் வழிகோலும். ஆணின் உள்ளங்களைத் திசை திருப்பும் முனையாகின்றது. பெண்ணியத்துக்கு குடும்பம், கற்பு, கலாசாரம் என்னும் போலித்தனங்களையும், பெண்ணின நசுக்கங்களையும் வெளிப்படுத்துகிறது. ஆனால் பெண்தான் உண்மை யதார்த்தத்தை வெளிப்படுத்தல்வேண்டும். இன்றைய பெண்ணினத்தின் எதிர்பார்ப்பு என்ன? பெண்ணே தன்னாதிக்கத்தை வென்றெடுக்கவேண்டும். வெறும் கோஷங்கள் வேண்டாம். பெண் பெண்ணாக நின்று எழுத வேண்டும். ''வாருங்கள் பெண்களே போராடுவோம்'' என்ற கோஷம் எல்லோருக்கும் தெரிந்தது. இந்தக் கோஷம் எல்லோருக்கும் பொதுவாகவும் இருக்கலாம். அதாவது உரிமை தேடும் அனைத்து வர்க்கத்திற்கும் இது பொதுவானது. யார் யாரை வெல்ல வேண்டும்? யாரை வீழ்த்தவேண்டும்? யாருக்காகப் போராட வேண்டும்? இதை சிந்தையில் பெண்கள் இட்டுக் கொண்டால் உலகம் இன்றே பெண் வசமாகும்.

கவிதை என்பது வெறுமனே வான், நிலவு, மலரை வர்ணிப்பதாக இல்லாமல் பெண்ணியத்தைக் கூறவேண்டும். வையகத்தை வெற்றிகொள்ள இணைந்து போராடுவதும், புரிந்து செயல்படுவதும் அவசியம் என்ற நிலையில் ''சேலைகளைச் சரிப்படுத்தியே வேலைகள் வீணானது போதும், கண் மையையும், இதழ்ப் பூச்சையும் சிறிதுகாலம் தள்ளி வைத்து விட்டு இளம் தோள்களில் கடமையின் சுமைகளை ஏற்றிக் கொள்ளடி. இனிவரும் காலங்களில் தூக்கி எறியும் கறிவேப்பிலையாய் பெண்ணைக் கருத முடியாது. அறிவும், தெளிவும், உறுதியும் கொண்டவளாய் பெண் இருக்கவேண்டும். பலவீனமான பெண்ணாக இனியும் இருக்க முடியாது. அநாகரீகமான வார்த்தைகளால் அவளைச் சிதைத்துவிட்ட ஆணாதிக்கத்துக்கு எதிராக 'அவமானப்படுத்தப்பட்டவள்' என்ற வலியை வரிகளில் பதிவு செய்யவேண்டும். சுய அடையாளமின்றி உழைக்கும் கருவியாய் மாறிப் போனவள் தனக்கான அடையாளத்தை உலகிற்கு எடுத்துக்காட்டி உலக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வேண்டும்.

பார்த்தல், கேட்டல், ருசித்தல், உணர்தல் இவற்றுடன் பகுத்தறிவும் எமக்குண்டு என்று பெண்கள் சொல்லவேண்டும்.

சூரியனை வசப்படுத்த முடியாவிட்டாலும் உனக்காக ஒரு நட்சத்திரத்தையாவது வசப்படுத்திக்கொள். யன்னல் கம்பிகளை வருடியது போதும். கண்களோடு கைகளும் நிலவைத் தொடட்டும். காட்டுப் பூவுக்கும் பெயர் வைத்து விட்டு உன் எழுத்தால் உலகையே கட்டிப் போட்டுக் கொள். இதுவே ஆணாதிக்கத்துக்கான முதல் சவால். முதல் சவாலே ஆணாதிக்கத்தை முற்றுகையிடட்டும்.

(முற்றும்)



## வார வசந்தம்

# மண்மூடும் சுவடுகள்..!



நட்சத்திரபாலன்

அந்தப் பாடசாலை இப்போது இருப்பதுபோல் வளமும் அழகும் கொண்டதாக அந்த நாள்களில் இருக்கவில்லை. கட்டடங்களும் இரண்டுதான். மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் தொகை மட்டும் கணிசமாக இருந்தது. வகுப்புகள் கூட தரம் ஒன்று முதல் தரம் பதின்மூன்று வரை இருந்தன. அப்போதெல்லாம் தரம் 1க்கு முன் ''அரிவரி' என்றொரு வகுப்பு இருந்தது. அரிவரி படித்துத்தான் முதலாம் வகுப்புக்குப் போனோம்.

நான் அங்கு படித்த காலத்தில் அதிபராக இருந்தவர் நஷனலும், வேட்டியும், சால்வையுமாக அலுவலக வாசலில் நிற்பதைக் காண்பதே ஒரு நிறைவு தரும். கம்பீரம், கண்டிப்பு, இரக்கம், யாரையும் மதித்து நேசித்து நடக்கும் இயல்பு. இவற்றால் அவர் தனிமதிப்புப் பெற்றிருந்தார். தனது ஊரிலிருந்து சைக்கிளில்தான் அவர் வருவார். இப்போது கூறுவதுபோல அதிபர் என்று நாம் அவரைக் குறிப்பிடுவதில்லை. 'தலைமை வாத்தியார்'தான் அப்போது புழக்கத்திலிருந்த சொல். பாடசாலையில் இடப்பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறையெல்லாம் அப்போது சகஜம். அரிவரி தொடக்கம் மூன்றாம் நான்காம் வகுப்புகள் வரை தரையில் அமர்ந்துதான் படித்தோம்.

வகுப்புகளில் இரைச்சல் அதிகமாயிருந்தால் தலைமை ஆசிரியர் பிரம்போடு புறப்படுவார். வகுப்புகளைப் பிரிப்பதற்காகப் போடப்பட்ட 'ஸ்கிறீன்' மீது பலமாக நாலு தட்டுத் தட்டுவார் – அந்தத் தட்டுதலோடு எல்லா வகுப்புகளிலும் சத்தம் ஓய்ந்துவிடும். வகுப்புகளில் ஆசிரியர் இல்லாவிட்டால்

''இப்ப ஆர் பிள்ளையள் உங்களுக்குப் பாடம்?''

''பூங்கோதை மிஸ் சேர்'' என்போம்.

''ஆ... பூங்கோதை அக்காவோ அவ இண்டைக்கு வரமாட்டா நாங்கள் படிப்பம்...'' என்றுவிட்டு வகுப்புக்குள் நுழைந்துவிடுவார். என்ன பாடமாக இருந்தாலும் எங்கள் அதிபர் படிப்பிப்பார். கணீரென்ற குரலில் பாடம் கேட்க ஆசையாயிருக்கும். அன்போடும் பரிவோடும் அவர் பிள்ளைகளை நடத்துவார்.

ஏதாவது ஏடாகூடமாகச் செய்யும் மாணவர்கள் அவரிடம் அகப்பட்டால் 'பூசை' தாராளமாக நடக்கும். அடிப்பக்கத்தில் வளைத்துக்கட்டிய நீண்ட பிரம்பு காலிலோ பின்புறத்திலோ மூன்று அல்லது நான்கு தடவைகள் தடம் பதிக்கும்.

''செவ்வையா நடக்க வேணும். குளப்படிக் குணங்களைப் [illegible] சொல்லி காரி[illegible] வைப்பார் – இப்போது மதிய உணவு வழங்குவதுபோல் அந்த நாள்களில் 'பணிஸ்' (Buns என்பதை அப்படித்தான் சொல்லித் தந்திருந்தார்கள்) தான் கொடுப்பார்கள். பதினொரு மணியளவில் நான்காம் பாடத்துக்கான மணி அடிக்கும்போது ''பாண்...'' என்ற இரைச்சல் காதைப் பிளக்கும். அந்த நாளில் வழங்கப்பட்ட பணிஸ் கூட மாணவர்களால் பாண் என்றுதான் குறிப்பிடப்பட்டது. அது வழங்கப்படுவதற்கான பாடவேளை மணிகூட 'பாண் பெல்'லாக இருந்தது. இடைவேளை கூட சின்ன வயதில் 'தண்ணி லீசர்' ஆக இருந்தது. லீசர் (leisure) என்பது பிற்காலத்தில்தான் புரிந்தது – எங்கள் தலைமை ஆசிரியரிடம் தண்டனை பெறும் யோகம் கிடைத்தால் அவருடைய கையால் பிறகு ஒரு பணிஸ் கிடைக்கும். சிலசமயங்களில பத்துச் சதம் கையில் தந்து பிறகு போய் ''தேத்தண்ணியும், சூசியமும் வாங்கிச்சாப்பிடு. நல்லாப் படிக்க வேணும். செவ்வையாப் படிக்கவேணும்'' என்று முதுகைத் தடவி விடுவார். தலைமை வாத்தியாரும் ஏனைய ஆசிரியர்களும் அன்போடும், பரிவோடும் உரிமையோடும் எங்களைத் தங்கள் சொந்தப் பிள்ளைகள் போல நடத்தினார்கள், அந்த நாள்களிலெல்லாம்!

(இன்னும் சுவடுகள் பதியும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்

அதிரடி விலைக்கழிவுகளுக்கு முந்துங்கள்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு

எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆடவர், பெண்களுக்கான அனைத்துத் துணி வகைகளுக்கும் கழிவு உண்டு. றெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய கழிவு உண்டு. பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான சீருடைத் துணிகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சனி, ஞாயிறு தினங்களில் முழுநாளும் கடை திறந்திருக்கும்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15.03.1932

உதிர்வு: 03.01.2007

திதி 10.01.2009

## திருமதி சின்னப்பு தங்கமணி

அன்புடன் எமையாண்ட பாசமிகு அம்மாவே!
ஆண்டிரண்டு ஆனதம்மா நீங்கள்
ஆண்டவன் அடிதேடி
ஆறாது எம்மனது மாறாது எம் துயரம்
ஆனாலும் உங்கள் ஆத்மா சாந்திபெற
என்றென்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கல்திட்டி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## யாழ்.பாடசாலைகளுக்கு இரசாயனப் பொருள்கள்

நல்லூர், ஜன.9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் விஞ்ஞான கூடங்களுக்கென இரசாயனப் பொருள்கள் வந்துள்ளன.

இவை இங்குள்ள ஐந்து கல்வி வலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளன என மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (202-11)

## யாழ்.மாநகரசபையின் கிணறுகள் இறைப்பு

நல்லூர், ஜன.9

'நிஷா' புயல் வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கிணறுகளை இறைக்கும் பணியை யாழ்.மாநகரசபை மேற்கொண்டு வருகின்றது.

இதுவரை 30 க்கும் அதிகமான கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்வதற்கென இன்றுவரை 103 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.(202-111)

## கச்சாய் பொது நூலகம் காலை 7 மணி முதல் சேவை

யாழ்ப்பாணம்,ஜன10

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் உப பணிமனையின் கீழ் இயங்கும் கச்சாய் பொது நூலகம் வாசகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் காலை 7 மணியிலிருந்து பொது மக்களின் பாவனைக்கு திறந்துவிடப்படும் என நூலகர் திருமதிபி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (202-131)

## நடமாடும் வைத்திய சேவை

யாழ்ப்பாணம்,ஜன10

சாவகச்சேரி பிரதேசசபையின் இலவச ஆயுள் வேத வைத்தியசாலையினரால் நடமாடும் வைத்திய சேவை தென்மராட்சி கிழக்குப் பகுதியான விடத்தற்பளை கிராமத்தில் கிழமையில் இரு தினங்கள் நடத்தப்படவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் இத் தகவலை தெரிவித்தார். (202-131)


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களுடன்
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

**Diploma in Computerized Accounting**
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 12/01/2009 09.00AM


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி — முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கோபாலன் தனசேகரம்**

(ஓய்வுபெற்ற கட்டளைசேவகர்-நீதிமன்றம் பருத்தித்துறை)

தோற்றம்-09-04-1933 மறைவு-06-02-2007



**தனசேகரம் ஞானசேகரம்**

(நிஷாந்தன் வீடியோ உரிமையாளர்)

தோற்றம்-12-10-1977 மறைவு-23-12-2007

திதி: பூரணை (10.01.2009)

செல்வவிலாஸ்,
கம்பர்மலை.

என்றும் உமைமறவாத குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் கந்தசாமி

### (E.S.P. நிறுவன முகாமையாளர்)

நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தசாமி 06.01.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் (தேவி) அன்புக் கணவரும் குமரதாசன் (பாபு-பிரான்ஸ்), துவாரகா (பபி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சதீஷனின் (லண்டன்) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பூமணி (மலர்) மற்றும் ஞானேஸ்வரி (ஞானம்), ஆனந்தசிவம் (சிவாஸ் வோர்ச் வேக்ஸ், யாழ்ப்பாணம்), நவரத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வடிவாம்பிகை (வடிவு), மகேஸ்வரி, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இந்திராதேவி, சண்முகரத்தினம், பிரேமளாதேவி (பேபி), மணியம், திருகோணலிங்கம், இரத்தினேஸ்வரி (புஸ்பா) ஆகியோரின் மைத்துனரும் காராளபிள்ளை, திருலிங்கநாதன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு நயினாதீவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்: நா.காராளபிள்ளை (சகலன்) மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



நெடுந்தீவு பிரதேச சபை நிகொட் நிதியுதவியுடன் கட்டி முடித்த மருந்தகத்தை பிரதேச சபைச் செயலாளர் வைத்திய அதிகாரியிடம் கையளிக்கும்போது எடுக்கப்பட்ட படம்.



''நிஷா'' புயலினால் பாதிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளைக்கு ஜனசக்தி காப்புறுதி கம்பனியினால் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ஒளிவிழாவும் பணியாளர் கௌரவிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன.
வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பணியாளர் நா.வ.சிவபாதத்துக்கு பாராட்டுப் பத்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
பங்குத் தந்தைவண.பிதா யூட் அமலதாஸ் அடிகளாரும் படத்தில் காணப்படுகின்றார்.



யாழ்.சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பால் நடத்தப்பட்ட வன்முறையற்ற தொடர்பாடல் பயிற்சிநெறி முடித்து வெளியேறும் மாணவர்க ளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

மாணவி செல்விராணி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும் விருந்தினர்களான அமலமரித் தியாகிகள் சபை யாழ்.மாகாண முதல்வர் அருட்திரு. போல் நட்சத்திரம் மற்றும் அருட்திரு டேமியன்(அ.ம.தி) அடிகளார் நிற்பதை யும் முதல் படத்திலும், மாணவி செல்வி கலிஸ்ராவுக்கு அருட்சகோதரி நீனா சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: த.பரமலிங்கம்)*



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழாவில் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவரைக் [illegible] படத்தில் காணலாம். *(படம்: லக்ஷ்மன்)*



காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற கஜமுகசங்கார உற்சவத்தில் எடுக்கப்பட்ட படம் (250)



யாழ்.மத்திய கல்லூரியின் அதிபராக அண்மையில் பொறுப்பேற்ற இ.ஓங்கார மூர்த்திக்கு கல்லூரி ஆசிரியர் வட்டம் ஏற்பாடு செய்த வரவேற்பு நிகழ்வில் ஆசிரியர் வட்டத் தலைவர் புதிய அதிபருக்கு மாலை அணிவிக்கின்றார்.




கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களின் கலை நிகழ்வை படத்தில் காணலாம்.



துளிர்கள் நிறுவனத்தின் சுயதொழில் பயிற்சி நிலையம் அண்மையில் திருநெல்வேலியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் விருந்தினரான இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் [illegible] இணைப்பாளர் ஆர்.அகிலன் நாடாவெட்டி நிலையத்தை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தனபாலன், நிறுவன இயக்குநர் கே.எஸ்.ரகு, கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் முகுந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவை நியமனங்கள்

நல்லூர், ஜன.10

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.மகேஸ்வரன் யாழ்.செயலக திட்டமிடல் பகுதியில் பிரதி திட்டப் பணிப்பாளராக ஜனவரி மாதம் முதல் நியமிக்கப் பட்டுள்ளார். (202-111)

* * *

நல்லூர், ஜன.10

சுன்னாகம் தபாலதிபராகக் கடமையாற்றிய ஐ. யோகஞானம் யாழ்.பிரதம தபாலகத்தின் தபாலதிபராக ஜனவரி முதல் நியமனம் பெற்றுள்ளார். (202-111)

* * *

சங்கானை, ஜன.10

மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலையின் புதிய அதிபராக திருமதி சிவகுமார் சத்தியகுமாரி நவம்பர் 24 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 19 வருடங்களாகச் சங்கானை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமை புரிந்து வந்தவராவர். (202-29)

* * *

யாழ்ப்பாணம், ஜன.10

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபராக வரணி குடமியன் அ.த.க பாடசாலை அதிபர் கா. குணசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வித்தியாலய அதிபர் வெ.நடராசா கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து குடமியன் அ.த.க பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் நியமிக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கல்வி அமைச்சினால் சிறந்த செயற்பாட்டு அதிபராகக் கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

* * *

யாழ்ப்பாணம், ஜன.10

தென்மராட்சி பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றிய செல்லையா ஸ்ரீரங்கன் உதவித் திட்டமிடல் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கைத் திட்டமிடல் சேவையினரால் நடத்தப்பட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றுத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (202-207)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.10

இலங்கை சித்த ஆயுள்வேத மருத்துவ மாணவ மன்றத்தினால் 'வட இலங்கை சுதேச வைத்திய சபையைப் புனரமைத்தலும், பொதுச்சபையை உருவாக்குதலும்' என்ற கருத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வட இலங்கை சுதேச வைத்திய சபையின் நிர்வாக உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## நிர்வாகிகள் தெரிவு

இணுவில், ஜன.10

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உடுவில் பிரதேச மன்றுக்கான கிளைக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக சி.மகாலிங்கமும், செயலாளராக ஆ. அருள்நேசராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கிளைக்குழு 3 வருடங்களுக்கான செயல்வீச்சுக் கொண்டது. (45)

* * *

யாழ்ப்பாணம், ஜன.10

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக சி.குமாரவேலும் உபதலைவராக சு.செல்லப்பாவும் உறுப்பினர்களாக செ.இலகுநாதன், இ.பரமேஸ்வரலிங்கம், சு.சுதாகர், ச.தில்லைநாதன், ம.சுதர்சினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவுகளில்...

மண்மகிழ 22 . 07 . 1945



கண்நெகிழ 10 . 01 . 2008

### அமரர் மரியாம்பிள்ளை யேசுதாசன்

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
அணையா அகல் விளக்காய்
எம் உள்ளமதில் பிரகாசிக்கும்
எம் அன்பு அப்பாவே!
உன்னதரின் உறைவிடத்தில்
எந் நாளும் மகிழ்ந்திருக்க
இறைஞ்சுகின்றோம் உங்களுக்காய்....

40, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(81542)

செபங்களுடன்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணில் 07 . 04 . 1942



விண்ணில் 11 . 12 . 2008

### அமரர் சந்திரசேகரம் பாலசுப்பிரமணியம்

( இலங்கை சுங்கப்பகுதி ஓய்வுபெற்ற அதிகாரி)

சாயியின் வடிவில் இறைவனைக் கண்டோனே!
சாயி சேவையே உயிர் மூச்சாக வாழ்ந்தோனே!
சாயியின் நாள் வியாழனெல்லாம் பஜனை செய்தோனே!
சாயியிடம் போய்ச்சேர்ந்து விட்டாயே அதே வியாழனில்.

11.12.2008 அன்று இறையடி சேர்ந்த எம் குடும்ப விளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (10.01.2009) சனிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டித்தெரு,
பருத்தித்துறை.

(81654)

மனைவி,
பிள்ளைகள்.

## இருபதாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் செல்லப்பா சோமசுந்தரம்

(மார்க்கண்டு)

மலர்வு 19.05.1929

உதிர்வு 10.01.1989



அன்பின் ஐயாவே! அழியாப் பெருநிதியே!
ஆண்டுகள் பல சென்றாலும் அகமதில் வாழுகின்றீர்!
இல்லறமாம் சோலையில் எழில் நிறைந்த மாமலரே!
கடல் வளம் சூழ் புங்குடுதீவுதனில்
மாறா இளமையுடன் மனம் மகிழ்ந்து எமைக்காத்து
கல்வியறிவுள்ளோராய் காலமெல்லாம் ஒளி வீசி
களிப்புடனே உலாவி வந்தீர்
கருணை மிக்க ஐயாவே!

நேற்றைய விட இன்று வளர்ந்தோம்
ஆனால் இன்று எம் சந்ததியை
காணவும் நீங்கள் வழி நடத்திச்
சென்றபாதையில் நாங்கள் நடக்கும்
சமயம் அதைக் காண நீங்கள்
எம்மோடு இல்லையே ஐயா!

7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

மனைவி, பிள்ளைகள், மருமகன்மார்,
மருமகள்மார், பேரன்மார், பேத்திமார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னலுறும் மக்களுக்காய் அஞ்சாது குரல் கொடுத்து வரலாற்றில் இடம் பிடித்துவிட்ட மகேஸ்வரன் எம்.பி.!

**மகேஸ்வரன் எம்.பியின் ஜனன தினம் இன்றாகும். அன்னாரது நினைவாக காரைநகர் மணற்காடு, கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள "மகேஸ்வரன் தரும சுரபி" மண்டபம் இன்று காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.**

தமிழ் மக்களுக்காகத் தன்னுயிரை நீத்த அஞ்சா நெஞ்சன் "இறைபணிச் செம்மல்" தியாகராசா மகேஸ்வரனின் பிறந்தநாள் நினைவு தினம் இன்றாகும். 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி பிறந்த மகேஸ்வரன் தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே பிறந்தார் எனக் கூறினால் மிகையாகாது. யாழ்.,கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இந்து கலாசார அமைச்சராகவும் திகழ்ந்த மகேஸ்வரன் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்த பணிகள் அளப்பரியன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனரமைக்க உதவியதுடன், பல ஆலயங்களுக்குப் பல்வேறுபட்ட உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கினார்.

எங்கு, எப்போது சென்றாலும் தமிழ் மக்களுக்காக அடுத்து என்ன செய்யலாம், அவர்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்ற எண்ணமே அவரது மனதில் காணப்படும். இனநெருக்கடியின் உச்சக்கட்டத்தின்போது எரிக்கப்பட்ட செல்வச்சந்நிதியான் ஆலயத் தேரினைப் புதிதாக உருவாக்கிக் கொடுத்த பெருமை மகேஸ்வரனையே சாரும். ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் எரிக்கப்பட்ட தேர் அதே ஆட்சியில் மீள நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதில் மகேஸ்வரன் உறுதியாக இருந்தார். அதற்கென நிதி ஒதுக்கித் தேரை வீதியுலா வரச் செய்தார். காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் உட்பட பல ஆலயங்களுக்கு அவர் தொண்டு செய்தார். அவரது பிறந்த தினமான இன்று அன்னாரது நினைவாகப் பெருமளவு நிதி செலவழித்து காரைநகர், மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள "மகேஸ்வரன் தருமசுரபி" எனும் மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

காரைநகர், மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயிலில் மண்டபம் ஒன்றினைக் கட்டித் திறக்க வேண்டும் என்று மகேஸ்வரன் எம்.பி.விருப்பம் கொண்டிருந்தார். இதற்கான நடவடிக்கைகளுக்காகத் திட்டங்களை வகுத்துக்கொண்டிருந்த வேளையிலேயே அவர் சிவனடி சேர்ந்தார். தனது அன்புக் கணவரின் ஆசை வீண்போய்விடக்கூடாது என்று கருதிய அவரது மனைவி விஜயகலா மகேஸ்வரன் இந்த மண்டபத்தை உடனடியாக்வே அமைத்து அதனை அன்னாரது பிறந்த நாளான இன்று திறந்து வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

கணவன் இறையடி சேர்ந்து ஒரு வருடத்துக்குள் இரவு, பகல் பாராது பாடுபட்டு இந்த மண்டபத்தை அவர் அமைத்துள்ளமை பாராட்டுக்குரியது. மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வளவில் அமைக்கப்பட்டுள்ள "மகேஸ்வரன் தரும சுரபி" என்ற இந்த மண்டபம் இன்று காலை9 மணிக்குத் திறந்து வைக்கப்படுகின்றது.

சிவத்தமிழ் வித்தகர், கலாநிதி மூதறிஞர் பண்டிதமணி க.வைத்தீஸ்வரக் குருக்கள் இந்த மண்டபத்தினைத் திறந்து வைக்கவுள்ளார். இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை "மகேஸ்வரனின் நினைவுகள்" குறித்து உரையாற்றவுள்ளார். ஆறு. திருமுருகன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

காரைநகரில் சிரேஷ்ட குருக்களான க.வைத்தீஸ்வரக் குருக்களைக் கொண்டு குறித்த மண்டபம் திறக்கப்பட வேண்டும் என்றும் மகேஸ்வரன் விரும்பியிருந்தார். இதற்கிணங்கவே திருமதி விஜயகலா மகேஸ்வரன் இதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளார்.

கணவன் விரும்பியவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ள திருமதி விஜயகலா, இன்றைய தினமே மண்டபத்தைத் திறந்து வைப்பதுடன், நண்பகல் அன்னாரது நினைவாக அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயிலில் மண்டபம் அமைக்க வேண்டுமென்ற மகேஸ்வரனின் கனவு இன்று நனவாகின்றமை காரைநகர் வாழ் மக்களுக்கு மட்டுமன்றி இந்துக்களுக்கே பெருமையான விடயமாகும்.

இந்துசமயம் தழைத்தோங்க அரும்பாடுபட்ட மகேஸ்வரன் எம்.பி. இறை பணிக்காகச் செய்த சேவையினைப் பாராட்டி தருமபுரம் ஆதீனம் "இறைபணிச் செம்மல்" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது.

இந்தக் கௌரவ பட்டத்திற்கிணங்க இறக்கும் வரை இறைபணிச் செம்மலாகவே அவர் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. இரண்டாவது உலக இந்துமாநாட்டினை அரும்பாடுபட்டு மகேஸ்வரன் நடத்தினார்.

இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்தபோது தியாகராசா மகேஸ்வரன் ஆற்றிய பணிகள் ஒன்று இரண்டல்ல. நாள் தோறும், நிமிடம் தோறும் பணியாற்றினார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 2ஆவது உலக இந்து மாநாடு நடைபெற்ற போது அது கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது.

மன்னார், திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்புக்கும் உதவிய மகேஸ்வரன் அங்கு கிரமமான முறையில் பூஜைகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருந்தார். அதேபோல் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலிலும் பூஜை வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்தார்.

இந்துமதத்தின் வளர்ச்சிக்காக மகேஸ்வரன் அரும்பாடுபட்டார். அவர் மறைந்த ஒரு வருட நினைவுதினம் குடாநாடு உட்பட நாட்டிலுள்ள பல ஆலயங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் கோயில், செல்வச்சந்நிதியான் ஆலயம், ஈழத்துச் சிதம்பரம், கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசரர் ஆலயம் என்பவற்றில் அன்னாரின் நினைவாக விசேட பூஜைகள் நடைபெற்றதுடன், நினைவுதின வைபவங்களும் இடம்பெற்றன.

இவையெல்லாம் இந்து சமயத்துக்கு மகேஸ்வரன் செய்த அளப்பரிய பணிகளை நினைவுகூருவதாகவே அமைந்திருந்தன.

2000ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்து குறுகிய காலத்துக்குள் இந்துகலாசார அமைச்சராகப் பதவி வகித்த மகேஸ்வரன் மூத்த அரசியல்வாதிகளுக்கெல்லாம் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு தடவையும் கொழும்பு மாவட்டத்தில் ஒரு தடவையுமாக மூன்று தேர்தல்களில் தொடர்ந்தும் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினரான மகேஸ்வரன் இறையடி சேரும்வரை தனது குடும்பத்தை விட நாட்டையும் நாட்டு மக்களையும் அதிகம் நேசித்தார். தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படும்போதும் வகை தொகையின்றிக் கைது செய்யப்படும்போதும், கடத்தப்பட்ட போதும், காணாமல்போன போதும் துடிதுடித்தார். இத்தகைய அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததுடன் போராடினார்.

அவரது நாடாளுமன்ற பேச்சுக்கள் அரசாங்கத்தின் அநீதிகளைப் புட்டுக்காட்டின. நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராகக் கடும்தொனியில் குரல் கொடுத்தார். அப்பாவித் தமிழ் மக்களுடன் விளையாடாதீர்கள். அவர்களை விடுவியுங்கள் எனக் குரல் எழுப்பினார்.

கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட போது அதனைச் சென்று பார்வையிட்ட மகேஸ்வரன், தமிழர்களுக்கு ஏன் இத்தகைய நிலை வரவேண்டும் என எண்ணிக் கவலைப்பட்டார்.

கொழும்பில் லொட்ஜ்களிலிருந்து தமிழ் மக்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியாவுக்கு அனுப்பப்பட்டபோது துடிதுடித்த மகேஸ்வரன், நாடாளுமன்றத்தில் தனது மேல் சட்டையினைக் கழட்டி எறிந்து ஆவேசமாகப் போராடினார்.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு முதன் முதலில் வெற்றிபெற்ற மகேஸ்வரன், குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகளைக் குறைக்குமாறு கோரி மாட்டு வண்டிலில் போராட்டம் நடத்தினார். தமிழ் மக்கள் பாதிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது உயிரையும் துச்சமென மதித்து துணிந்து இறங்கிப் போராடினார்.



2004ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மகேஸ்வரன் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானபோதும் அரசியலிலிருந்து ஒதுங்காது மக்கள் சேவைக்காகத் தன்னை மீண்டும் அரசியலில் ஈடுபடுத்தினார்.

தன்னை நம்பிய தமிழ் மக்களை நட்டாற்றில் விடக்கூடாது என்பதற்காக அரசியலில் தொடர்ந்தும் அவர் ஈடுபட்டார். அரசியலில் ஈடுபட வேண்டாம். அதிலிருந்து விலகுமாறு குடும்பத்தினர் பல தடவைகள் வற்புறுத்திய போதும் தன்னை நம்பி தமிழ் மக்கள் தெரிவு செய்துள்ளனர். அவர்களுக்குத் தொடர்ந்து சேவை செய்வதே தனது நோக்கம் என அவர் தெரிவித்ததுடன், குடும்பத்தினரின் கோரிக்கையையும் நிராகரித்திருந்தார்.

உபசரிக்கும் பண்பு கொண்ட மகேஸ்வரன் எவருடனும் முகங்கோணாது நடக்கும் பண்பைக் கொண்டவர். கஷ்டப்பட்டு முன்னேறிய அவருக்கு ஏனையவர்களின் கஷ்டங்கள் நன்கு புரிந்திருந்தது.

உபசரிக்கும் பண்பில் அவரை மிஞ்சிவிட முடியாது. இத்தகைய உயர்ந்தவரின் இழப்பானது ஈடுசெய்ய முடியாததாகும். அன்னாரின் உயிர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவரது நினைவுகள் என்றும் தமிழ் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கும். அன்னாரது பிறந்த நாளான இன்று அவரது ஞாபகார்த்தமாகத் திறந்து வைக்கப்படும் "மகேஸ்வரன் அமுத சுரபி" மண்டபம் என்றும் அவரது பெயரைச் சொல்லும்.

வரலாற்றில் அழியாத இடம்பிடித்துள்ள மகேஸ்வரன், தமிழ் மக்கள் துன்ப துயரின்றி வாழ வேண்டும் எனக் கனவு கண்டார். அந்தக் கனவு விரைவில் நனவாக வேண்டும் என்பதே இன்று அனைவரது வேண்டுதலாகவும் பிரார்த்தனையாகவுமுள்ளது.

மகேஸ்வரனின் கனவு நனவாக அனைவரும் பாடுபடவேண்டும் எனத் திடசங்கற்பம் பூணவேண்டியது அவசியம். அன்னாரது பிறந்த தினமான இன்று அவருக்காக அனைவரும் பிரார்த்திப்போம்.

**எஸ்.சுப்பிரமணியம்**
*யாழ்ப்பாணம்.*

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜன.10

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி வலைப்பந்தாட்ட மைதானத்தில் சங்க உப தலைவரும் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலருமான திருமதி ஜே. எப்.ஏ.ரூபசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் சு.அகிலதாசும், சிறப்பு விருந்தினர்களாக ஈ.எஸ்.பி நிறுவனப் பணிப்பாளர் ஈ.எஸ்.பி. நாகரெட்ணம், யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியையும், முன்னாள் தேசிய வலைப்பந்தாட்ட வீராங்கனையுமான திருமதி மல்லிகா ஜோன் அரியதாஸ், நல்லூர் றோட்டரிக் கழகத் தலைவர் ஓங்காரரூபன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இறுதிப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

கலப்பு ஆட்டம்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

பெண்கள் அணி

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம். (202-86)

* * * * *

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி விளையாட்டு அலுவலர் கே.முகுந்தன் அறிவித்துள்ளார். (202-86)

* * * * *

வலி.வடக்கு, ஜன.10

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (1-84)

* * * * *

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அனைத்துக் கழகங்களையும் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகம் தரும்படி உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் செல்வி சி.மனோன் மணி வேண்டியுள்ளார்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 23 கழகங்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.2009 ஆம் ஆண்டிற்கான கழகங்களுக்கு இடையேயான உடுவில் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட்டுடன் ஆரம்பமாகின்றன. (1-86)

## திருவாசக முற்றோதல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்.திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் கோயிலில் திருவாகச முற்றோதல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜன.10

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், ஜன.10

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதலும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் நடத்தப்படவுள்ளன.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் யாழ்.பலாலி வீதி, சுந்தர்மடம் இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயிலில் நடைபெறும். (204)

* * *

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது. (202)

* * *

சுழிபுரம், ஜன.10

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் திருவாசகமுற்றோதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நண் பகல் விசேட பூசைவழிபாட்டுடன் அன்னதானமும் நடைபெறவுள்ளது. (202-28)

* * *

சுழிபுரம், ஜன.10

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் திருவாசகமுற்றோதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடைபெறவுள்ளது. (202-28)

* * *

கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம் பெறும்.

* * *

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. (218)

## மக்கள் முகம்



நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைச் சேர்ந்த திருமதி சுதா கஜேந்திரகுமார் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக நியமனம் பெற்றுள்ளார்.

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் கடந்த மாதம் 16 ஆம் திகதி இவர் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.



இலங்கை வங்கி யாழ்.அதிமேற்றரக் கிளை முகாமையாளர் எஸ். ஜெயேந்திரா இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளராகப் பணியாற்றிய எஸ். உலகநாதன் சேவையிலிருந்து இளைப்பாறியதையடுத்தே அப்பதவிக்கு ஜெயேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை நடத்திய திருவாசக விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.. சமயக் குரவர்களின் திருவுருவப் படங்களை செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆச்சிரமத்துக்கு அடியார்கள் ஊர்வலமாக எடுத்து வருவதை முதலாவது படத்தில் காணலாம். கோப்பாய் றோ.க. பாடசாலை அதிபர் ச.லலீசன் 'உன் கையிற் பிள்ளை' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்குப் பேரவையின் போசகர் பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*


கணபதி துணை

## கஜகேணிப் பிள்ளையார் கோயில்
## உசன் - மிருசுவில்

## மஹா கணபதி ஹோம யக்ஞம்

அடியார்களே!

எம்பெருமான் கோயிலில் நாளை (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி மஹா கணபதி ஹோமம் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் ஹோம பூசை வழிபாட்டில் இணைந்து எம்பெருமானைப் பிரார்த்திப்போமாக.

12 மணி - அன்னதானம்

பிரதம குரு: *அருள்வாக்குச் சித்தர் - சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள்*
(ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயில், இணுவில், மருதனார்மடம்)

உசன்,
மிருசுவில்.

*விளம்பர அனுசரணை:*
**அருள் விநாயகர் ரேடர்ஸ்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## ஏலவிற்பனை - மரங்கள்

பிரதான வளாகத்தில் இருந்த அரசமரம் மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம், ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் இருந்த 'மாமரம்' என்பன (அடிமரம் மற்றும் கிளைகள்) 13.01.2009 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளதால் ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் அவ்வேளை நிர்வாகக் கிளைக்கு முன்பாக சமுகம் தரவும். வெற்றிபெறும் ஏலதாரர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். மரங்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அவரே பெறவேண்டும்.

நேரம்: 10.30 பிரதான வளாகம்
11.00 ஊடகவளங்கள் பயிற்சி நிலையம்
11.30 இராமநாதன் நுண்கலைக்கழகம்.

பதில் பதிவாளர். (C/556585)


## வடமராட்சி வலய விளையாட்டுப் போட்டிகளின் நிரல் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்து, பட்மின்ரன், மேசைப்பந்து, துடுப்பாட்டம் ஆகிய போட்டிகளின் நிரல் தயாரிப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலுள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202)

## கால்கோள் விழாக்கள்

கரவெட்டி,ஜன.10

தேவரையாளி இந்துக் கல்லூரியின் கால்கோள் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி சின்னத்தம்பி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் செ. அட்ஜெயலிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் கலந்துகொள்வார். (202-70)

* * *

கரவெட்டி,ஜன.10

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய கால்கோள் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சதாமதி நந்தபாலன் கலந்துகொள்வார். (202-70)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,ஜன.10

சுழிபுரம், கம்பனை அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

தினமும் பிற்பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதலும் இடம்பெறும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சங்காபிஷேகத்துடன் திருவிழா நிறைவுபெறும். (204-28)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.10

மாவிட்டபுரம், வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயிலின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

விசேஷ அபிஷேகம், பூஜை, திருவூஞ்சல் என்பன நடைபெற்று, 11 மணிக்கு அம்பாள் புதிதாக அமைக்கப்பட்ட தேரில் வலம் வருவார். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.10

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை திருவாதிரை உற்சவம் இடம்பெறும்.

விசேட பூஜை, அபிஷேகம் மற்றும் திருவெம்பாவைப் படிப்பு போன்றன நடைபெறும். (202-224)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.10

நீர்வேலி தெற்கு வீரபத்திரர் ஆலயத்தில் திருவெம்பாவை இறுதி நாளான இன்று திருவாதிரை உற்சவம் காலை 6 மணிக்கு விசேட பூஜை அபிஷேக வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். (202-224)


## ஆங்கில வகுப்புகள்

G.C.E O/L, A/L மாணவர்கள் திறமைச்சித்தி பெறுவதற்கும், தொழில் புரிவோர் கடிதங்கள், அறிக்கைகள் தயாரிப்பதற்கும் மற்றும் வெளி நாடு செல்லவிருப்போர் ஆங்கிலம் எவ்வித தயக்கமின்றியும் அச்சமின்றியும் உரையாடுவதற்கும், ஆங்கில இலக்கணம், ஸ்போக்கன் இங்கிலிஷ் ஆகியன 20 வருடங்களுக்கு மேலாக கொழும்பிலும் யாழ்.நகரிலும் அனுபவம் கொண்ட ஆசிரியரினால் யாழ்.நகர் சுண்டிக்குளி மற்றும் அதற்கு அண்மித்த பிரதேசங்களில் வீடுகளுக்கு வந்து கற்றுக்கொடுக்கப்படும்.

*தொடர்பு:-* **0771754689**

(SMS மூலம் அல்லது மாலை 7 மணியின் பின்பு தொடர்புகொள்ளவும்) (81688)


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

## அரசாங்க அறிவித்தல்

### கழிக்கப்பட்ட பொருள்கள் ஏலவிற்பனை

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மேற்படி அலுவலகத்தின் மருந்துக் களஞ்சியம் அமைந்துள்ள பண்ணை வளாகத்தில் வைத்து கீழ்வரும் கழிக்கப்பட்ட பொருள்கள் 27.01.2009 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. சித்திபெற்ற கேள்விக்காரர்கள் உடன் உரிய கேள்வித் தொகையைச் செலுத்தி பொருள்களைத் தமது செலவில் எடுத்துச்செல்லுதல் வேண்டும். மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். பொருள்களையும் பார்வையிடலாம்.

1) வெற்றுத் திரிபோஷா பைக்கற்றுக்கள்
2) வெற்று உரப்பை
3) வெற்றுப் போத்தல்கள்
4) வெற்று பிளாஸ்ரிக் கொள்கலன்கள் (5 லீற்றர்)
5) பாவித்த ரயர்கள், ரியூப்புகள்
6) பாவித்து, கழிக்கப்பட்ட மர இரும்புத் தளபாடங்கள் மற்றும் பொருள்கள்.

*வைத்தியகலாநிதி* **ஆ.கேதீஸ்வரன்**
பிராந்தியப் பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(C/556584)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கணபதி இலட்சுமி**

தோற்றம்
21*04*1928

மறைவு
23*12*2007



*திதி: பௌர்ணமி*
*(10.01.2009)*

கள்ளம் கபடமற்ற உங்கள் புன்னகை
துடிதுடிப்பான உங்கள் செயல்கள்
தன்னலமறியா உங்கள் கடமையுணர்வு
பாசமிகு எங்கள் அன்னையே
இனி என்று காண்போம் உம் திருமுகத்தை.

உங்களின் ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வரணி வடக்கு,
வரணி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

(81677)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **பெரியான் மகேந்திரன்** (குட்டி)
(றொக்சிபாதுகாப்புச் சேவை, பாதுகாப்பு ஊழியர்)

தோற்றம்
09*12*1973

மறைவு
01*12*2008

நாங்கள் பார்த்திருக்கவே
சித்திரம் ஒன்று சிதைந்து போனதே!
நாங்கள் விழித்திருக்க கோலமொன்று
கலைந்து போனதே!
எங்களின் கண்முன்னாலேயே
வண்ணப்பூவொன்று
மண்ணில் மறைந்ததுவே!

என்ன செய்வோம்
ஏது செய்வோம்!...
நிம்மதியில்லை எமக்கு...
அர்ப்பணிக்கின்றோம் எம்
அஞ்சலிகளை கண்ணீர்த் துளிகளாக
தங்களின் பாதங்களின் சந்நிதியில்...

என்றும் ...

உதயசூரியன் வீதி,
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

பொ.விஜேந்திரன் (சகோதரன்).

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அழைப்பும்



அமரர்
**சுப்பிரமணியம் நவரத்தினம்**
(முன்னாள்தலைவர் - அரியாலை ஸ்ரீஞான வைரவர் கோயில் - ஓய்வுபெற்ற தபாற் திணைக்கள தரம் பிரிக்கும் உத்தியோகத்தர்)

மண்ணில்
23*03*1926

விண்ணில்
11*12*2008

11.12.2008 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம் அவர்களின் 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (10.01.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அந்நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*293/10, ஆனந்தன்வடலி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (81683) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி இராசரத்தினம் சந்தானலட்சுமி



கரவெட்டி கிழக்கு, செங்குந்த வீதியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சந்தானலட்சுமி 07.01.2009 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், வட்டக்கச்சி ம.வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் கௌரி (ஜேர்மனி), ராதா (ஆசிரியர் - வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), முருகவேள் (கனடா), நக்கீரன் (ஆசிரியர்), வாணி (ஆசிரியர், வ.ம.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயகுமார் (ஜேர்மனி), சிவகுமார், கயல்விழி, சுகிர்ராஜ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
T.P.: 024 222 1493 (81693)

தகவல்:
**கா.கணேசலிங்கம்**
(உறவினர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதலை நிறுத்தக்கோரி இஸ்ரேலுக்கு ஐ.நாவின் பாதுகாப்புச் சபை அறிவிப்பு

நியூயோர்க், ஜன. 10

காஸா துண்டத்தின் மீதான தனது தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபை தீர்மானமொன்றின் வாயிலாகக் கோரிக்கை விடுத்துள்ளது. அதே வேளை, காஸாவிலிருந்து தனது படைகளை மீளப் பெற்றுவிடுமாறும் அது கோரியுள்ளது.

கடந்த மூன்று நாள்களாக நடைபெற்று வந்த கடும் விவாதத்துக்குப் பின்னர், இக் கோரிக்கை அடங்கிய பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பான வாக்கெடுப்பில் அமெரிக்கா பங்கேற்கவில்லை. எனினும், எஞ்சிய 14 உறுப்பு நாடுகளும் வாக்களித்தன.

"இப்பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், காஸாவின் புறநகர்ப் பகுதிகளில் இஸ்ரேலிய ஜெட்போர் விமானங்கள் உக்கிரக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்களில் பல கட்டடங்கள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. உயிரிழப்புகள் தொடர்பாக உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை" என பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புச் சபையின் தீர்மானம் உடனடியாக இஸ்ரேலிய அதிகாரிகள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. எனினும், இஸ்ரேல், ஹமாஸ்கள் ஆகிய இரு தரப்புகளுக்குமிடையிலான விவகாரத்தில் ஒருதலைப்பட்சமாக இஸ்ரேலைமாத்திரம் கட்டுப்படுத்தும் எந்த ஒரு தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்து வந்துள்ளார்கள்.

அம்புலன்ஸ் ஊழியர்கள், குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளுக்கு வியாழக்கிழமை சென்று, இடிபாடுகளுககுள் சிக்குண்டிருந்த சடலங்களை மீட்டார்கள். பலியானோரின் எண்ணிக்கை 765ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களில் மூன்று சத விகிதத்தினர் சிறார்களாவர் என ஹமாஸ் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இடிபாடுகளுக்குள் சிக்குண்ட தமது தாய்மாரின் சடலங்களுக்கருகில் பட்டினியால் மயங்கிக் கிடந்த 4 பிள்ளைகள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள் என செஞ்சிலுவைச் சங்கத்துக்கான சர்வதேசக் குழு அதிகாரி குறிப்பிட்டார்.

"ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அமெரிக்கா பங்கேற்கவில்லை. இவ்விவகாரத்தில் எகிப்து மேற்கொண்டுள்ள முயற்சிகள், மத்தியஸ்தம் ஆகியவற்றை அமெரிக்கா அக்கறையோடு அவதானித்து வருகிறது. எனினும், பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அது ஆதரிக்கின்றது" என அமெரிக்க இராஜாங்க செயலர் கொண்டோலீஸா ரைஸ் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானின் கராச்சியில் தீ விபத்து; 40 பேர் பலி!

இஸ்லாமாபாத், ஜன. 10

பாகிஸ்தானின் துறைமுக நகரான கராச்சியிலுள்ள சேரிப்புறத்தில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 40 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். அநேக சேரிப்புற வீடுகள் துரிதமாகப் பரவிய தீச்சுவாலைகளுக்கு இரையாகின என உள்ளூர் அதிகாரிகள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

கராச்சியின் வட பகுதியிலுள்ள சேரிப்புறத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இத் தீ விபத்து ஏற்பட்டது. துயின்று கொண்டிருந்தவர்களும் உடனடியாக வீடுகளைவிட்டு வெளியேற முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்தவர்களுமே தீக்குப் பலியாகியுள்ளனர் என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

"மின்சாரக் கம்பியொன்று அறுந்து குடிசையொன்றின் கூரையில் விழுந்ததை அடுத்து, குபீரென தீப்பற்றி துரித கதியில் முப்பதுக்கு மேற்பட்ட வீடுகளுக்குப் பரவியது. கடும் புகை மண்டலத்தோடு தீச்சுவாலைகள் எழுந்தன" என நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

"தீப்பற்றிக் கொண்டதும் சேரியைவிட்டு வெளியேற குடியிருப்பாளர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். எனினும், வெளியேறுவதற்குப் போதிய வழிகள் கிடையா. ஒரே வழியினூடாக வெளியேற முண்டியடித்துக் கொண்டிருந்தவர்களில் பலர் தீக்குப் பலியாயினர்" என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

# மும்பைத் தாக்குதலில் கைதானவர் பாகிஸ்தானியர் என்பது நிரூபணம்

## அந்நாட்டு அமைச்சர் ஒப்புதல்

இஸ்லாமாபாத், ஜன. 09

"மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதி அஜ்மல் எங்கள் நாட்டைச் சேர்ந்தவர்தான்" என பாகிஸ்தான் அமைச்சர் ஷெர்ரி ரகுமான் ஒப்புக்கொண்டுள்ளார். கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மும்பையில் பாகிஸ்தானைச் சேர்ந்த 10 தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 15 பொலிஸ் அதிகாரிகளும், 165இக்கும் மேற்பட்ட பொதுமக்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தத் தீவிரவாதிகளில் 9 பேரை கொமாண்டோ படையினர் சுட்டுக் கொன்றனர். அஜ்மல் அமீர் கசாப் என்ற தீவிரவாதி மட்டும் உயிருடன் பிடிக்கப்பட்டார்.

எனினும், 'அஜ்மல் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர் அல்லர்' என பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வந்தது. இது தொடர்பாக இந்தியத் தரப்பில் ஏராளமான ஆதாரங்கள் அளிக்கப்பட்டன. எனினும், அவற்றை பாகிஸ்தான் ஏற்கவில்லை. அஜ்மலின் பெயர் தேசிய புள்ளி விவர தகவல் மையத்தில் பதிவாகவில்லை என பாகிஸ்தான் தெரிவித்து வந்தது.

இந்நிலையில், "தீவிரவாதி அஜ்மல் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்தான்" என்பதை பாகிஸ்தான் தற்போது முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் ஷெர்ரி ரகுமான் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அஜ்மல் கசாப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்தான்' என அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளார். எனினும், அந்த அறிக்கையில் இது பற்றி வேறு எந்த விவரமும் வெளியிடப்படவில்லை. இதேபோல், பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மஹமூத் அலி துரானியும், அஜ்மல் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்தான் என்பதை பாகிஸ்தானின் 'டான் நியூஸ்' தொலைக்காட்சிக்கு தாம் அளித்துள்ள பேட்டியில் உறுதிப்படுத்தியுள்ளார்.

## அல்-குவைதாவின் பாக். தலைவர் ஏவுகணைத் தாக்குதலில் பலியாம்

இஸ்லாமாபாத், ஜன. 10

பாகிஸ்தான் அல்-குவைதா செயற்பாட்டுப் பிரிவுத் தலைவர் உசாமா அல்-கினியும் அவரது லெப்டினண்ட் ஷேக் அஹமத் சலீம் சுவீடனும் அமெரிக்க ஏவுகணைத்தாக்குதலில் கொல்லப்பட்டனர் என அமெரிக்கத் தீவிரவாத ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள்.

ஆப்கானோடு ஒட்டிய பாகிஸ்தானின் எல்லைப்பிராரந்தியத்திலுள்ள தென் வசிரிஸ்தானில், ஆளில்லா அமெரிக்க உளவு விமானமொன்று மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்களில் இவர்கள் கொல்லப்பட் டார்கள் என்றும் அதிகாரிகள் விளக்கினார் கள்.

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்திலுள்ள மாரியட் ஹோட்டல் மீது கடந்த வருட செப்டெம்பரில் மேற்கொள்ளப்பட்ட ட்ரக் குண்டுத் தாக்குதலுக்கு உசாமா அல்-கினியே சூத்திரதாரியாவார் என்றும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்

# உலக டென்னிஸ் ஜாம்பவானை தோற்கடித்து இந்தியாவின் இளம் வீரர் அதிரடிச் சாதனை




சென்னை, ஜன.10

சென்னையில் புதன்கிழமை பெய்த மழை காரணமாக, அன்றையதினம் நடைபெறவிருந்த போட்டிகள் அனைத்தும் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி முதல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து பிரதான களத்தில் வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்ற 2 ஆவது சுற்றின் முதல் போட்டியில் முன்னாள் சாம்பியன் கார்லோஸ் மோயாவை எதிர்த்து இந்தியாவின் இளம் வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் களமிறங்கினார்.

சுமார் 2 மணி 11 நிமிடம் நீடித்த ஆட்டத்தில் 6-4, 5-7, 4-6 என்ற செட் கணக்கில் மோயாவுக்கு அதிர்ச்சியளித்தார் இளம் வீரர் தேவ்வர்மன்.

உலகத் தர வரிசையில் மோயா 42 ஆவது இடத்திலும், தேவ்வர்மன் 205ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. சென்னை ரசிகர்களின் நாயகனான மோயா, 7ஆவது முறையாக இந்த ஆண்டு பங்கேற்றார்.

கடந்த அண்டு அரையிறுதிவரை முன்னேறி, சக நாட்டின் ரபேல் நடாலிடம் வீழ்ந்தார். 2004, 2005 ஆண்டுகளில் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார்.

மோயாவை வீழ்த்தியது குறித்து மிகவும் மகிழ்ச்சி தெரிவித்த தேவ்வர்மன், இந்த வெற்றியால் தனக்கு மேலும் நம்பிக்கை கிடைத்துள்ளது என்றார். "உலகத் தர வரிசையில் முன்னிலையில் உள்ள மோயாவுக்கு எதிராக முதல் செட்டில் சற்று பதற்றதுடன் விளையாடினேன். அதனாலேயே அந்த செட்டை இழந்தேன். அதன் பிறகு அவரது நிலையையும் அனுபவத்தையும் கருத்தில் கொள்ளாமல் விளையாட்டில் மட்டுமே கவனம் செலுத்தி வெற்றி பெற்றேன்" - என்றார்.

அடுத்து, குரோஷிய வீரர் இவா கார்லோவிக் உடன் மோதவுள்ளார் அவர். "இதற்கு முன்பு லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஆகிய இந்திய வீரர்களுடன் மட்டும் விளையாடியுள்ளேன். தேவ்வர்மனுடன் விளையாடியது இல்லை. இந்த ஆட்டத்தில் அவர் சிறப்பாகவே விளையாடினார். சேர்வீஸும் நன்றாக இருந்தது. பேஸ்லைன் ஆட்டம் வலுவாக இருந்தது. 3ஆவது செட்டில் மிகவும் களைப்படைந்தேன். அதற்கு வெயிலை காரணமாகக் கூற முடியாது. பயஸ், பூபதியைக் காட்டிலும் தேவ்வர்மனுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது' என்றார். 32 வயதாகும் மோயா.

பிரதான களத்தில் அடுத்து நடைபெற்ற 2 ஆவது சுற்று ஆட்டத்தில் குரோஷிய வீரர் மரின் சிலிக் 6-0, 6-4 என்ற நேர் செட்களில் உஸ்பெகிஸ்தான் வீரர் டெனிஸ் இஸ்டோமினைத் தோற்கடித்து முன்னேறினார்.

உலகத் தரவரிசையில் 26 ஆவது இடத்தில் இவா கார்லோவிக் 6-1, 6-4 என்ற செட் கணக்கில் செக். குடியரசு வீரர் இவா மினாரைத் தோற்கடித்து, தேவ்வர்மனுடன் 3 ஆவது சுற்று சவாலை எதிர்நோக்கியுள்ளார். ரெய்னர் ஷுட்லர், ஜோன் பாவு ஆகிய ஜேர்மனி வீரர்கள் தத்தமது எதிராளிகளை எளிதில் தோற்கடித்து 3ஆவது சுற்றுக்கு முன்னேறினர். அதேசமயம் மற்றொரு ஜேர்மனி வீரர் அன்டிரியாஸ் பெக் 4-6, 1-6 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் வீரர் மார்செல் கிரானோஸிடம் வீழ்ந்தார்.

## ஆனையிறவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாகப் பளையில் நிலைகொண்டிருந்த 53, 55ஆவது படையணிகள் நேற்றுக் காலை இயக்கச்சிப் பகுதியை அடைந் தன என்றும் பின்னர் அவர்கள் அங்கிருந்து ஆனையிறவுப் பகுதியை நோக்கி முன்னேறின் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனையிறவு மீதான தாக்குதல் நடவடிக்கைக்கு பிரிகேடியர் சவேந்திர சில்வா தலைமை வகித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆனையிறவு முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. வடக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதப் படும் ஆனையிறவுப் பகுதி இராணுவத்தினரின் கைகளில் வீழ்ந்தமை அவர்களுக்குக் கிடைத்த முக்கியமான வெற்றியாகும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான ஏ-9 வீதி இராணுவத்தி னரின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்திருக்கின்றது.

யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையான ஏ-9 வீதி 23 வருடங்களின் பின்னர் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.(அ-சி)

## லஸந்தவின் கொலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கட்சியினர் முதலில் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று பதாகைகளை ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிறகு சபாபீடத்திற்கு முன்பாக அமர்ந்து இறுதிவரையும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ரணில் விக்கிரமசிங்க, லக்ஷ்மன் கிரியெல்ல, ரவிகருணாநாயக்க, ஜோஸப் மைக்கல் பெரேரா ஆகியோர் தங்களது ஆசனங்களில் இருந்து எழுந்து நின்றவாறே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரணில் விக்கிரமசிங்க சிவப்புத்துணியால் வாயைக் கட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார். இவர்களோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் இணைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### முஸ்லிம் காங்கிரஸினரும் ஆர்ப்பாட்டம்

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், அக்கட்சியின் எம்.பிக்கள் சவீக் ரஜாப்தீன் மற்றும் நௌஸாத் ஆகியோரே மு.காவின் சார்பில் கலந்துகொண்டனர்.

ஆனால், இந்த ஆர்ப்பாட்டத்தைக் கிண்டல் செய்யும் வகையில் ஆளுங்கட்சியினர் கூச்சலிட்டனர். பிரதி அமைச்சர்கள் மஹிந்தானந்த அளுத்கமகே, ஹுஸைன் பைலா, அமைச்சர்களான ரோஹித அபயகுணவர்தன, டளஸ் அழகப்பெரும,மைத்திரிபால உள்ளிட்ட பல அமைச்சர்கள் ஒன்றிணைந்து கூக்குரலிட்டனர்.

### கூச்சலும் குழப்பமும்

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான வினா, விசேட அறிக்கை சமர்ப்பிப்பு, சிறப்புரிமை மீறல் பிரச்சினை போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐ.தே.கட்சியினரை அரச அமைச்சர்கள் சிலர் அவர்களது கையடக்கத் தொலைபேசி மூலம் படம்பிடித்துக் கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்க, லக்ஷ்மன் கிரியெல்ல, ஜோஸப் மைக்கல் பெரேரா, ரவிகருணா நாயக்க ஆகியோர் ஆர்ப்பாட்டம் செய்தமையை அமைச்சர் மைத்திரிபால அவரது கையடக்கத் தொலைபேசி மூலம் படம்பிடித்து பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து இன்னும் பல அமைச்சர்களும் இவ்வாறு படம்பிடிக்கத் தொடங்கினர்.

வாயில் சிவப்புத் துணியைக் கட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்த ரணிலைப் பார்த்து பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கிண்டல் செய்தார்.

### கறுப்புத்துண்டு எங்கே என்று கேட்ட அமைச்சர்

"உங்கள் தலைவரின் துண்டை அவிழ்த்துவிடுங்கள். இல்லாவிட்டால் அவர் மூச்சுத் திணறி செத்துப்போய்விடுவார்" என்று மஹிந்தானந்த ஐ.தே.கட்சி எம்.பிக்களைப் பார்த்துக் கூறினார்.

அடுத்து மஹிந்தானந்த ரவூப் ஹக்கீமைப் பார்த்து "எங்கே கறுப்புத் துண்டு" என்று கேட்டார்.

ஹக்கீம் தோளில் கிடந்த கறுப்புத் துணியை எடுத்து தலையில் சுற்றிக்கட்டி இதோ இருக் கிறது கறுப்புத்துணி.நன்றாகப் பாருங்கள் என்று கூறினார்.

இந்த நிலையில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பலஸ்தீனத்தின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை ஒன்றைச் சபையில் வெளியிட்டார்.

### ஊதுகுழலால் கூக்குரல்

இந்த அறிக்கைக்கு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பதிலளிக்க எழுந்தபோது சபைக்கு முன்பாக அமர்ந்திருந்த ஐ.தே.கட்சி எம்.பிக்கள் பதாகைகளை ஊதுகுழலகளாகச் சுற்றி அவற்றை வாய்களில் வைத்துக் கூக்குரலிட்டனர்.

இந்தக் கூக்குரல் ஓசைகளின் மத்தியில் போகொல்லாகம அநுரகுமார திஸாநாயக்கவின் கூற்றுக்குப் பதிலளித்து முடித்தார்.

இதைத் தொடர்ந்து அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்குமாறு ஐ.தே.கவிடம் சபாநாயகர் கேட்டுக் கொண்டபோது அவர்கள் முடியாது என்று கூறித் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால் சபை நடவடிககைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக காலை 10.15 மணியளவில் சபாநாயகர் நாடாளுமன்றத்தை இம்மாதம் 20 ஆம் திகதி காலை 9.30 மணி வரை ஒத்திப்போட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியினர் கலந்துகொள்ளவோ கருத்துகள் தெரிவிக்கவோ இல்லை. அவர்கள் அமைதியாக இருந்து அனைத்தையும் பார்த்துக்கொண் டிருந்தனர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குக!



## சோனியாவுக்கு ராமதாஸ் அவசரக் கடிதம்

சென்னை, ஜன. 10

**முல்லைத்தீவில் இன்று பெரு மளவில் ஏற்படவிருக்கும் மனித உயிரிழப்பைத் தடுப்பதற்கு, இலங் கையில் உடனடிப் போர்நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். - இவ்வாறு ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்திக்கு, பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் அவசர கடிதம் எழுதியுள்ளார்.**

அவர் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

விடுதலைப் புலி போராளிகளுக்கு எதிராக இலங்கைப் படையினர் போர் நடத்துகிறார்கள் என்ற போர்வையில், இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கிக் கொல்லப்படு வது குறித்துத் தமிழக மக்கள் கொந்தளிப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இலங்கையில் நிலவும் அநீதியான நிலைமை குறித்துத் தமிழ்நாட்டிலுள்ள அனைத் துக் கட்சிகளும் கவலை தெரிவித்துள்ளன.

இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத் துவதற்கு அவர் தலையிட வேண்டும் என்று பிர தமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து வேண்டு கோள் விடுப்பதற்காக, கடந்த டிசம்பர் 4ஆம் திகதி தமிழகத்திலிருந்து அனைத்துக் கட்சி தூதுக்குழுவைத் தமிழக முதல்வர் கருணாநிதி தலைமை ஏற்று அழைத்துச் சென்றார். அமைதி முயற்சிகளைத் தொடங்குவதற்கு வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புகிறோம் என தமிழகத் தூதுக்குழுவி னரிடம் பிரதமர் உறுதி அளித்தார்.

ஆனால் பிரதமர் வாக்குறுதி அளித்தபடி பிரணாப் முகர்ஜி இலங்கைக்குச் செல்லவில்லை என்பதையும், தமிழக மக்களின் ஒட்டுமொத்த குரலுக்கு மதிப்பளிக்கப்படவில்லை என்பதை யும் வருத்தத்துடன் உங்களுக்கு நான் தெரிவித் துக் கொள்கிறேன்.

இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்புடன் வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ஆறு கோடி தமிழ் மக்களும் மத்திய அரசை அணுகினர். ஆனால் எதுவும் நடக்க வில்லை. எனினும், இலங்கைத் தமிழ் மக்க ளும், இந்தியத் தமிழ் மக்களும் நீங்கள்தான் தங் களின் பாதுகாவலர் என்று உங்கள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.'

முல்லைத்தீவில் இன்று பெருமளவில் மனித உயிரிழப்பைத் தடுப்பதற்கு, முறையிடு வதற்கான கடைசிப் புகலிடமாக உங்களை நான் அணுகி இருக்கிறேன். மத்திய அரசை ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகளை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

அதே தகுதியில், இலங்கையில் உடனடியா கப் போர்நிறுத்தம் ஏற்படத் தலையிட வேண் டும் என்றும், இலங்கை அரசுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையே பேச்சுக்களுக்கு ஏற் பாடு செய்ய வேண்டும் என்றும் இந்திய அரசுக்கு நீங்கள் ஆணையிட வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்தச் சிக்கலை மிகுந்த மனிதநேயத் துடனும், அனுதாபத்துடனும் நீங்கள் அணுகு வீர்கள் என்றும், இலங்கையில் தமிழ் மக்க ளுக்கு அமைதியையும், பாதுகாப்பையும் மீட் டுத் தருவீர்கள் என்றும் நான் உறுதியுடன் நம் புகிறேன் - என்றுள்ளது.



தை பிறந்தால் வழி பிறக்கும். ஆனால், ஒரு வழி பிறந்தால்தான் ஈழத் தமிழருக்கு தை பிறக்கும்.

தமிழ்ப் புத்தாண்டை வரவேற்கும் விதமாக திருச்சி அருகே மண்ணச்ச நல்லூர் சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்று முன்தினம் பொங்கல் விழா கொண்டாடினர். இதற்காக பட்டுச்சேலை அணிந்து வந்திருந்த மாணவிகள் புதுப்பானையில் பொங்கல் வைக் கின்றனர்.

# போரை நிறுத்தக் கோரி தமிழகத்தில் வீடுகள், கடைகளில் கறுப்புக்கொடி!

''இலங்கையில் போரை நிறுத்தி, தமிழர் களைக் காப்பாற்ற வேண்டும்'' என கோரிக்கை விடுத்து, பல்லடம் அருகே ஆறு கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் வீடுகள் மற்றும் கடைகள் முன்பு நேற்றுமுன்தினம் கறுப்புக் கொடியேற்றினர்.

அதன்பின், வாவிபாளையம் பிரிவில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவப் பொம் மையை எரித்த 75 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். பல்லடம் அருகே வாவிபாளையம், மேலகுள்ளம்பாளையம், கீழகுள்ளம்பாளை யம், முத்தூர், வரப்பாளையம், மேட்டுக்கடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், ''இலங்கையில் போரை நிறுத்தி தமிழர்களை மத்திய அரசு காப்பாற்ற வேண்டும்'' என்பதை வலியுறுத்தி தங்களது வீடுகள், கடைகள் முன்பு நேற்றுமுன்தினம் கறுப்புக்கொடியேற்றினர்.

இதேவேளை, வாவிபாளையம் பிரிவில், இலங்கையில் போரை நிறுத்தி தமிழர்களை காப்பாற்றவேண்டும் என்பதை வலியுறுத்தி வாவிபாளையம் ஊராட்சி பொதுமக்கள், சுந்தரமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது இலங்கை ஜனாதிபதியின் உருவப் பொம்மையை இருவர் எரித்தனர். ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட 75 பேரை காமநாயக்கன்பாளை யம் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் காமநாயக்கன்பாளையத்திலுள்ள திருமண மண்டபத்தில் காவலில் வைக்கப்பட்டனர்.

# இந்தியாவை தீவிரவாதிகளால் நிலைகுலையச் செய்யமுடியாது

சென்னை, ஜன. 10



இந்தியாவைத் தீவிரவாதிகளால் நிலை குலைய செய்ய முடி யாது - என்று பிரதமர் மன்மோகன்சிங் ஆவே சம் வெளியிட்டுள்ளார்.

## மன்மோகன் ஆவேசம்

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வெளிநாட்டு இந்தியர்களுக்கான 7ஆவது மாநாடு தொடங்கியது. இந்த மாநாட்டை பிரதமர் மன் மோகன்சிங் நேற்றுமுன்தினம் காலையில் தொடக்கி வைத்து பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

நமது சுதந்திரமான பாரம்பரியத்துக்கும், இணைந்த வாழ்வுக்கும் அச்சுறுத்தலாக பயங் கரவாதம், தீவிரவாதம் எழுந்துள்ளன என்பதற்கு சமீபத்தில் மும்பையில் நடந்த தாக்குதல் ஒரு கொடூரமான நினைவூட்டலாக இருக்கிறது. இந்தியா வெற்றிகரமான ஒரு தேசமாக மாறு வதை பலர் விரும்பவில்லை. ஆனால் இந்தி யாவை எந்த ஒரு பயங்கரவாதமோ, தீவிரவா தமோ நிலைகுலையச் செய்ய முடியாது என்பதை நாம் மீண்டும் மீண்டும் உலகத்துக்கு நிரூபித்துக் காட்டி இருக்கிறோம்.

இந்தியாவின் பாதுகாப்பை பலப்படுத்து வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைக ளும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. தீவிரவாதத்துக்கு இங்கு பிழைப்பு இல்லை என்பதையும், பயங்கரவாதத்தை ஏவுவதற்கு அவர்களுக்கு ஏவுதளம் இல்லை என்பதையும் உறுதி செய்வதற்காக சர்வதேச அளவில் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சி தொடரும்.

காசா பகுதியில் நடக்கும் தாக்குதலால் வளைகுடா நாடுகளில் ஏற்பட்டு இருக்கும் பதற்றம் மேலும் அதிகரித்து வருவது நம்மை வேதனைப்படுத்துகிறது. அங்கு நடக்கும் தாக் குதலால் அப்பாவி ஆண்கள், பெண்கள், குழந் தைகள் தேவையில்லாமல் பலியாகின்றனர். இந்தச் சம்பவத்தை இந்தியா வன்மையாக கண் டிக்கிறது. சர்வதேச அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அங்கு விரைவில் அமைதி ஏற் படுத்துவார்கள் என்று நம்புகிறேன் - என்றார்.

# வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நடிகை ஐஸ்வர்யா ராய் போட்டி?

லக்னோ, ஜன. 10

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சமாஜ் வாதி கட்சி சார்பாக முன்னாள் உலக அழகியும், ஹிந்தி நடிகையுமான ஐஸ்வர்யா ராய் போட்டி யிடுகிறார். இவரை உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள ஏதாவது ஒரு தொகுதியில் நிறுத்த சமாஜ் வாடி முடிவு செய்துள்ளது எனத் செய்தி வெளி யாகியுள்ளது.

சமாஜ்வாடிக் கட்சி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரபல திரைப்பட நட்சத்திரங்களை களத்தில் இறக்க முடிவு செய்துள்ளது.

தற்போது முன்னாள் உலக அழகி ஐஸ் வர்யா ராய் மற்றும் நடிகர் சஞ்சய் தத் ஆகியோரை களம் இறக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஐஸ்வர்யா ராயின் மாமியாரான ஜெயா பச்சன், சமாஜ்வாதிக் கட்சியின் மாநிலங்களவை எம்.பி யாக இருக்கிறார். அது போல அவரது மாமனாரும், ஹிந்தி சூப்பர்ஸ்டாருமான அமிதாப்பச்சன், அலகா பாத் தொகுதி எம்.பி.யாக இருந்துள்ளார். மேலும் சமாஜ்வாடி கட்சியின் செயலாளர் அமர்சிங் கும், அமிதாப் பச்சனும் நெருங்கிய நண்பர்கள்.



சமாஜ்வாதி வேட்பாளர்களுக்கு அமிதாப் பச்சன் மறைமுகப் பிரசாரம் செய்திருக்கிறார். உத்தரப்பிரதேசத்தில் [illegible] தொகுதியில் ஐஸ்வர்யா ராய் போட்டியிடுவார் எனக் கருதப்படுகிறது. [illegible] போட் டியிடுவதை கட்சி மேலிடம் இன்னும் உறுதி செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✵ இலங்கையில் போர் நிறுத்தம் தொடர்பான ✵

# பிரதமரின் உறுதிமொழி என்னாயிற்று? தமிழர் என்ன ஏமாந்த சோணகிரிகளா?

## கி.வீரமணி அறிக்கை



ஈழத்தில் மூன்று இலட்சம் தமிழர்கள் இன்னும் காடுகளில் பாம்புக் கடிகளுக்கும் இயற்கைத் தொல் லைகளுக்கும் ஆளாகி அவதிப்படும் நிலை யில், போரை நிறுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என்று 33 நாட்க ளுக்கு முன் பிரதமர் மன்மோகன்சிங் கொடுத்த உறுதிமொழியை இதுவரை காப்பாற்ற வில்லையே ஏன்? தமிழர்கள் ஏமாந்த சோண கிரிகள் என்ற நினைப்பா?

- இவ்வாறு வினாத் தொடுத்துள்ளார் திரா விடர் கழகத் தலைவர் கி.வீரமணி.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் விடுத்த அறிக்கை வருமாறு -

ஈழத் தமிழர்கள், புலம் பெயர்ந்து அகதிக ளாக தனுஷ்கோடிப் பகுதிக்கு படகுகளில் தப்பி வந்த தமிழ்க் குடும்பத்துச் சகோதர சகோதரிக ளிடம் நேர்காணல் நடத்திய செய்தியை கடற் கரையில் காவல்துறையிடம் பதிவு செய்து கொண்டு அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்ன செய்தியைக் கேட்டு உள்ளம் வெடித்து விடுவது போல் இருந்தது. இதயத்தின் அழுகை யால் கசிந்தது இரத்தக்கண்ணீர். கிளிநொச்சியி லிருந்து தப்பி, முல்லைத்தீவின் காடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது.

அவர்களில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் உட்பட பலரும் அடிக்கடி பாம்புக்க டிக்கு ஆளாகி மரணமடைகிறார்கள். அதிலிருந்து காப்பாற்ற எந்த விஷக்கடி மருந்தும் இல்லை. வானம்தான் இயற்கை அருளிய அவர்களது கூரைகள். எப்படியாவது இந்தப் போரை நிறுத்தி, அழிந்து வரும் எம் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசு முன்வரும் என்ற எதிர்பார்ப்போடு தான் இருக்கிறோம் என்று, வழியும் கண்ணீ ருடன் சொன்னதைக் கேட்டு எம்மினம் நித்தம் நித்தம் செத்து சுண்ணாம்பாகிக் கொண்டிருக் கிறதே என்று வேதனைப்படுகிறோம்.

புலிகளை அழிக்கிறோம் என்ற சாக்கில் தமிழர்கள் மீது குண்டு மழையை பொழிகிறது சிங்கள அரசு.

ஆனால், போரை நிறுத்த மத்திய அரசு இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழக மக்களின் சுயமரியாதைக்கு விடப் படும் சவாலா? தமிழர்கள் ஏமாந்த சோணகி ரிகள்; அவர்களைப் பற்றி நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்ற மத்திய அரசின் அலட்சி யமா? அடையாளம் தெரியாதவர்களுக்கு வழி யில் ஆபத்து ஏற்பட்டால் கூட, உடனே ஓடி உதவிடும் அந்த மனிதநேய உணர்வுகூட மத்திய அரசுக்கு - தமிழர்களின் வாக்குகளால் சிம்மாச னங்களில் உள்ளவர்களுக்கு இல்லையே! இதுபற்றி எவர் பழிக்கும் அஞ்சாமல் நமது உணர்வுகளை அணை உடைந்த வெள்ளமாய் உணர்த்திட வேண்டாமா?

இது ஏதோ புலிகள் பிரச்சினை அல்ல. அவர்களுக்கான வேண்டுகோளும் அல்ல. உலகின் பல நாடுகளிலும் அகதிகளாகி விட்ட பிறகு, எஞ்சிய ஈழத்தமிழர் சொந்த மண்ணில் வாழ்வுரிமைக்குப் போராடுகிறார்களே, அவர்க ளுடைய வாழ்க்கைப் பிரச்சினை!

ஈவு இரக்கமே இல்லையே! எத்தனை நாள் கள் ஓடி விட்டன? உறுதிமொழி தந்து 33 நாட் கள் ஓடிவிட்டனவே, பிரதமரின் உறுதிமொழி காற்றில் பறந்து விட்டதா? கடும் விலையைப் பெறுவது காலத்தின் கட்டாயமாக ஆகிவிடக் கூடாது என்பதுதான் - மத்திய அரசினை ஆதரிப்பதில் உறுதிகாட்டி மதவாதச் சக்திக ளுக்கு எதிராக நிற்கும் எம்மைப் போன்றவர் களின் கேள்வியாகும்.

விடை கிடைக்குமா? விடிவு வருமா? ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா அம்மையாருக்கு எமது வேண்டுகோள்.

ஒத்த கருத்துள்ளவர்கள் ஓரணியில் திரண்டு ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காக்க ஒன்றுபடுவோம். அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்க வேண்டுகோள் விடுக்கிறோம்.

# ஈழ ஆதரவாளர் சீமானுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவருக்கு மிரட்டல்

## கியூப் பிரிவு பொலிஸார் விசாரணை

மதுரை, டிச. 10



இயக்குநர் சீமானுக்கு எதிராக வழக்குத் தொடர்ந் தவருக்கு தொலைபேசி மிரட்டல் விடுக்கப்பட் டுள்ளது. இதுகுறித்து மத்திய புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசா ரணை நடத்தி வருகி றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டித்து இராமேஸ்வரத்தில் திரையுலகத்தினர் நடத்திய பொதுக்கூட்டத்தில் இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசினர் என இராமநாதபுரம் கியூ பிரிவுப் பொலிஸார், அவர்கள் மீது வழக்குப்பதிவு செய் தனர். பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு மதுரைச்சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதன்பின்பு இராமநாதபுரம் நீதிமன்றம் அவர்களுக்கு பிணை அளித்தது. இதனால் அவர் கள் சிறையில் இருந்து வெளியே வந்தனர். இந்த நிலையில் இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பிணையை ரத்து செய்ய வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றக் கிளை காங்கிரஸ் சட்டத்தரணிகள் பிரிவு அமைப் பாளர் பி.முத்துப்பாண்டி உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை உயர்நீதி மன்று தள்ளுபடி செய்தது.

அதன்பின்பு ஈரோட்டில் நடந்த கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்று சீமான் கைது செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து சீமானை தேசிய பாது காப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்க வேண் டும் என்று சட்டத்தரணி முத்துப்பாண்டியன் மனு அனுப்பினார். இந்த நிலையில் முத்துப் பாண்டியனுக்கு மர்ம நபர் ஒருவர் 2 முறை தொலைபேசியில் மிரட்டல் விடுத்துள்ளார். தொலைபேசியில் பேசிய அந்த நபர் 'நீங்கள் உங்களது சட்டத்தரணி வேலையை மட்டும் பாருங்கள். தேவையில்லாமல் சீமான் விடயத் தில் தலையிட்டால் கடுமையான விளைவு களைச் சந்திக்க நேரிடும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து குறித்து மதுரையில் உள்ள மத்திய புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரித்து வருகிறார்கள்.

# இந்தியாவின் ஜூலியன் வாலா பாக். படுகொலைளுக்கு ஒப்பான தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்



35 ஆண்டுகளுக்கு முன்பாக இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படு கொலைகள் தமிழர்களின் அரசியல் வர லாற்றில் மறக்கப்பட முடியாதவை.

யாழ்ப்பாண நகரின் வீரசிங்கம் மண்ட பத்திற்கு எதிரே அமைக்கப்பட்ட மேடை யிலிருந்து முற்றவெளி மைதானத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை நோக்கி சொற்பொழிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அந்தச் சொற்பொழிவாளர்கள் அரசியல் பற்றிப் பேசவில்லை. அரசுக்கு எதிரான வன் முறை உணர்வைத் தூண்டும் உரைகளை நிகழ்த்தவில்லை. தமிழரின் உரிமைக் கோரிக்கை பற்றி முழக்கம் எழுப்பவில்லை. தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றி - அதன் பண் டைய பெருமைகள் பற்றி - தமிழ்மொழியின் வளம்பற்றித்தான் சென் னை யில் இருந்து வந்திருந்த பேராசிரியர் நயினா முகமது உரை நிகழ்த்திக்கொண்டி ருந்தார். கூட்டம் ஆவலோடு செவிமடுத் துக் கொண்டிருந்தது.

யாழ்.நூல் நிலையத்தின் பின்புறமாக முனியப்பர்கோயில், திறந்தவெளி அரங்கு, றீகல் படமாளிகை, வீரசிங்கம் மண்டபம், எரிபொருள் நிரப்பு நிலையம், பிரதான தபால் கந்தோர் என் பவற்றைத் தொட்டுச் செல்லும் அந்தப் பிரதான வீதியில் எள் ளுக்கூட விழுவதற்கு இடம் இல்லாத வகையில் சனத்திரள் நிறைந்திருந்தது. சனத்திரளை ஊடறுத்துச் செல்வதற்கு கோட்டையிலிருந்து வந்த பொலிஸ் கூட் டத்தினர் முனைந்தனர். பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை பொறுப் பேற்றிருந்த பொலிஸார் வேலியே பயிரை மேய்ந்த கதையாக தமிழ்ப் பொதுமக்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். கண்ணீர்ப் புகைக்குண்டுகளைப் பொழிந்தனர். அப்பாவிகளான ஒன்பது தமிழ்ப் பொது மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. நிராயு தபாணிகளான தமிழ் மக்கள் பதறியடித்து நாலாபுறமும் சிதறி ஓடி மறைந்தனர். இது அனைத்துலக தமிழாராய்ச்சி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடத்திய நான்காவது மாநாட்டின்இறுதி நாள்நிகழ்ச்சிகளின்போது தமிழர்களின் மனதில் ஆழப்பதிந்த தடம்.

ஆனால்... அனைத்துலகதமிழாராய்ச்சி மன்றத்தினர் முதலாவது மாநாட்டைக் கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாட்டை சென்னையிலும், மூன்றாவது மாநாட் டைப் பாரிஸிலும் நடத்திய பின்னர் நான் காவது மாநாட்டை இலங்கையில் நடத் தத் தீர்மானித்தபோதே அப்போதைய சிறி லங்கா அரசு சதி செய்ய ஆரம்பித்துவிட் டிருந்தது. எந்தவிதமான அரசியல் நோக்க முமின்றி மொழி ஆராய்ச்சி என்பதையே முதன்மைப்படுத்தி தமிழரின் கலாசார பாரம்பரிய பெருமைகளை மீட்டுப் பார்க் கும் இந்த மாநாடு கொழும்பிலேயே நடத் தப்பட வேண்டு மென்று அரசு முரண்டு பிடித்தது. மாநாட்டிற்கான அரசின் உத விகள் நிறுத்தப்படும் என்று மிரட்டியது. பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்று எச்சரித்தது. வெளிநாட்டுப் பிரதிநிதிக ளுக்கான நுழைவு அனுமதி (விஸா) வழங் குவதில் வேண்டுமென்றே பல இழுத் தடிப்புகள் செய்யப்பட்டன. இத்தனைக் கும் மத்தியில் தமிழ் மக்கள் தமிழுக்கு விழா வெடுத்து கோலாகலமாக மாநாட்டை நடத்தினர்.

இந்த மாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸார்நிகழ்த்திய அட்டகாசக் கொடு மைகள், இந்திய சுதந்திரப் போரின் ஜாலியன் வாலா பாக் படுகொலைக ளுக்கு ஒப்பானது. ஜெனரல் டயஸ் தலை மையில் நிகழ்ந்த ஜூலியன் வாலா பாக் படுகொலைகள் எவ்வாறு இந்திய சுதந் திரப் போரை உக்கிரமாக்கியதோ அதற்கு சற்றும் குறையாதவகை யில், அன்றைய யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத் தியட்சகராக இருந்த சந்திரசேகரா தலை மையில் நிகழ்ந்த தமிழாராய்ச்சி மாநாட் டுப்.படுகொலைகளும் தாக்கத்தை ஏற்ப டுத்தின.

எடுத்ததற்கெல்லாம் விசாரணைக் கமிஷன் நியமிக்கும் அன்றைய சிறிமா அரசு இந்தப் பட்டவர்த்தன மான படு கொலைகள் பற்றி எந்தக் கமி ஷனையும் நியமிக்கவில்லை. தமிழ் மக்களை இரண் டாம் தரக் குடிமக்களாகவே கருது கின்றன என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிய முதலாவது நிகழ்ச்சியாக தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளன. -இலவல்

## ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை பெறுபேறுகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜன.10

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் பெறுபேறு கள் நேற்று விமானம் மூலம் எடுத்துவரப் பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளை இன்று காலை 9 மணி முதல் வலயங்களில் பாட சாலை அதிபர்கள் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (1)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று நடத் தப்படவிருந்த கலந்துரையாடல் எதிர் வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(1-207)

# முழுமையான விசாரணையைக் கோருகின்றது இந்தியா

கொழும்பு, ஜன.10

'சண்டே லீடர்' பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலை குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள் ளுமாறு இலங்கை அரசை கேட்டுக் கொண்டுள்ள இந்தியா, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துமாறு கோரியுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

கொழும்பில் ஆயுததாரிகள் மேற் கொண்ட தாக்குதலையடுத்து, இலங்கை யின் லீடர் குழும பிரசுரங்களின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க காலமானார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச் சியுமடைந்தோம்.

எம்.ரி.வி. கலையகம் தாக்கப்பட்டது உட்பட இலங்கையின் ஊடக அமைப்பு கள் மீது தாக்குதல்களும் அச்சுறுத்தல்க ளும் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலை யில் கடுமையாக கண்டிக்கப்பட வேண் டிய இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

எந்த ஜனநாயகத்திற்கும் ஊடக சுதந் திரம் மிகவும் அவசியமானது என நாங்கள் கருதுகின்றோம். மேலும் இவ்வாறான தாக் குதல் சம்பவங்கள் இலங்கையின் ஜன நாயக சுதந்திரம் என்ற கருத்திற்கு முரணா னது - என்றுள்ளது. (சி)

# அமெரிக்காவும் கண்டனம்

கொழும்பு, ஜன. 10

'சண்டே லீடர்' வாரப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதைக் கடுமை யாகக் கண்டித்துள்ள அமெரிக்கா, இலங் கையில் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிப்ப வர்களை மௌனமாக்குவதற்கான முயற்சி இதுவெனக் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச் சின் உதவிப் பேச்சாளரான ரொபெட் வூட் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச் சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இலங்கையில் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிப்பவர்களை மௌன மாக்குவதற் காக தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படும் முயற்சிகளின் இறுதியாக இடம்பெற் றிருக்கும் சம்பவம் கடுமையாகக் கண்டிக் கப்பட வேண்டிய செயலாகும்.

லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை இலங்கையின் சுதந்திர ஊடகத்திற்கு வீழ்ந்த பாரிய அடியாகும்.

ஐக்கிய ஜனநாயக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்ப டும் முயற்சிகளை இவ்வாறான தாக்குதல் கூட பாதிப்பது குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது - என்றுள்ளது.

## மரக்கறி வகைகளின் சந்தை விலைகள் (நேற்றையவை)

குடாநாட்டின் பிரதான சந்தைகள்

| மரக்கறி வகைகள் 1-கி.கிராம் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 190 | 150 | 160 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 110 | 110 | 100 |
| ப.மிளகாய் | 800 | 800 | 600 | 500 | 600 |
| தக்காளி | - | 600 | 300 | 120 | - |
| அவரை | 80 | 120 | - | - | 80 |
| மரவள்ளி | 80 | 70 | 80 | - | 60 |
| கோவா | 120 | 100 | 120 | 60 | 120 |
| கரட் | 140 | 100 | 140 | 80 | 120 |
| பூசணி | 80 | 70 | 70 | 90 | 80 |
| புடோல் | 130 | 120 | 100 | 45-70 | 100 |
| வாழைக்காய் | 130 | 120 | 140 | 50 | 120 |
| பீற்றூட் | - | - | - | - | - |
| சி.வெங்காயம் | 90 | 60 | 100 | 60 | 100 |
| பெ. வெங்காயம் | 180 | 150 | 180 | 70-90 | - |
| பாகற்காய் | 220 | 200 | 200 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 90 | 80 | 100 | 40-55 | 80 |
| கருணைக்கிழங்கு | 40 | 40 | 40 | 80 | 50 |
| பயிற்றங்காய் | 200 | 180 | 220 | 180 | 200 |
| லீட்ஸ் | 210 | 180 | 200 | - | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 25-30 | 30 | 20-35 | 20-30 |

(உதவி: HNB ASSURANCE)

# மனிதனின் இன்றைய.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றை வாழ்க்கையில் அனுசரித்தல்,

சமூக நீதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற் றுக்கு கட்டுப்படுதல், ஊழல்களைத் தடுத்தல், சூழல் மாசடையாது பாதுகாத்தல் ஆகியன சமுதாயத்தில் அருகிக் கொண்டே வருகின்றன. அநீதிகள், ஊழல்கள், துர் நடத்தைகள், கொடுமைகள் என்பன பெருகி வருகின்றன.

### பண்பாட்டையும் விழுமியங்களையும் இழந்துவரும் மனிதன்

மனித குலம் அதற்கே உரித்தான பண் பாடு, ஆத்மீக விழுமியங்களை இழந்து கொண்டு வருதலை இந் நிலைகள் உணர்த்துகின்றன. தற்கால கல்வி முறை இதனை ஊக்குவிக்கின்றதோ என எண் ணத் தோன்றுகின்றது.

நாம் வாழும்யுகம் விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்தியில் அதி தீவிர வளர்ச்சி கண்டுள்ள காலப்பகுதியாகும். கல்வியே அதற்குக் காரணம். இதன் பயனாக மக் களின் பொருளாதாரம், வாழ்க்கை வசதி கள், ஆடம்பரங்கள் என்பன செழித்து ஓங்குகின்றன. நாகரிகம் வளர்ந்துள்ளது. ஆனால் "நயத்தக்க" நாகரிகமாக அது அமைய வில்லை. அதனால் மக்கள் வாழ்க்கையில் அமைதி, மகிழ்ச்சி, சமாதானம் என்பன காணப்படுதல் அரிதாகிவிட்டது.

மனித குலம் இன்று எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை என்னவென்றால், விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் அதிதீவிர வளர்ச்சிக்கு இணையாக மானு டப் பண்புகள், விழுமியங்கள் உள்ளிட்ட ஆன்மீகத்துறை விருத்தி பெறாமையாகும்.

மனித வாழ்க்கைத் தரத்தின் முன்னேற் றம், உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல், ஆன்மீக தேவைகளை நிறைவு செய்தல் ஆகிய இரண்டினதும் சமவளர்ச் சியின் அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும். இன்று அவ்வாறு செய்யப்ப டுவதில்லை. கல்வி பக்கச் சார்பாகி வருவ தையே இது காட்டுகிறது.

குடும்பக் கடமைகள், சமூகக் கடமை கள், தொழிற் கடமைகள் முதலிய மனிதக் கடமைகளில் ஆன்மீக உணர்வுகள் வெளிப் படுத்தப்படுதல் அவசியம். அப்போது தான் அவை சிறப்பாக ஆற்றப்படும்.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் நிச் சயம் தேவை. ஆனால் அவற்றுடன் ஆன் மீகம் இணையும் போது தான் விஞ் ஞான மும் தொழில்நுட்பமும் ஆக்கத்திற்கு பயன்தரும். அதேவேளை அழிவிற்குத் துணைபோகாமலும் இருக்கும். உலகி யலும் ஆன்மீகமும் இணைய வேண்டும். இந்நிலையை ஏற்படுத்துவதற்குத் தூய கல்வியே உறுதுணையாகும்.

### ஆன்மீகம் சமூகமயமாக வேண்டும்

ஆன்மீகம், மறு உலகமயப்படுத்தப் பட்டிருப்பதால் அதைப் புரிந்துகொள் வதில் கஷ்டப்பட வேண்டியுள்ளது. சமயவாதிகளே அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும். உண்மையில், ஆன்மீகம் இவ் வுலகமயப்படுத்தப்படல் வேண்டும். ஆன்மீகம் சமூகமயமாதல் இன்றைய அவசிய தேவையாக உள்ளது. கல்விமான் கள், சமய சான்றோர்கள் ஆகிய இரு தரப் பினரும் இதனைக் கருத்துக்கெடுத்து சம யம் சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தை கற் பித்தல், கற்றல் அணுகு முறைகளை மதிப் பீட்டு முறைகளைத் தயாரிக்க வேண் டும். அத்தோடு பாடசாலைக் கலைத் திட் டம் முழுவதிலும் அதனோடு கொள்ளப்படும் உறவிலும், உணர்விலும், செயற்பாடு களிலும் ஆன்மீகம் ஊடுருவிச் செறிந்து இருக்க வேண்டும். ஆன்மீகம், மறு உல கத் திற்குரியது என்பதுடன் மட்டும் நிறுத் தி விடாது, இவ்வுலக வாழ் வின் செழு மைக் கும், சீருக்கும் தேவையானது என்ற உணர்வு ஏற்படும் பட்சத்திலேயே கல்வி கருத்துள்ள தாக அமையும். அதன் துணையுடன் அமைகின்ற வாழ்வும் சிறப்புள்ளதாகும்.

சமயம் இன்று தத்துவ நிலையிலேயே காணப்படுகின்றது. அது இன்று நடை முறை வாழ்வில் இல்லை என்பது பெருங் குறைபாடாக உள்ளது. வாழும் சமயம் என்ற பெயருடன் திகழ வேண்டும் என்றால் அச்சமயம் தத்துவத்தில் வாழ்ந்தால் போதாது, மக்களின் நடைமுறை வாழ்வி லும் வாழ வேண்டியது மிகவும் அவசியம்.

ஆன்மீக வளம் மனிதனுள் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் வரை அது மனிதனின் வாழ்க்கைக்கு பயன்படப் போவது இல்லை. ஆன்மீக விரயமே ஏற்படும். இன்று காணப் படுவது ஆன்மீக விரயமே. அதன் விளைவு தான் இன்றைய மனித துன்பங்களும் துயர்களும் ஆகும். ஆன்மீகம் பயனுள்ளதாக அமைய வேண்டுமாகில், மனித வாழ் வில் அது வெளிப்பாடு ஆதல் வேண்டும்.

ஆகவே, இன்றைய நன்நாளில் இங்கு கூடி யிருக்கும் அனைவரும் எமது சமயம் தத்துவ நிலையிலிருந்து நடைமுறை வாழ்க்கையில் அனுபவத்திற்கு கொண்டு வந்து ஆன்மீகம் மனித வாழ்வில் வெளிப் பட அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க திடசங்கற்பம் கொள்வோமாக -என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகுகளில் இராமேஸ்வரம் சென்ற 15 இலங்கைத் தமிழ் அகதிகள் கைது

இராமநாதபுரம், ஜன, 10

இராமேஸ்வரம் அருகே நேற்றுமுன் தினம் 2 படகுகளில் வந்த 15 இலங்கைத் தமிழ் அகதிகளை கடலோரக் காவல் படையினர் கைதுசெய்துள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே அரிச்சல் முனையிலிருந்து 5.5 கடல் மைல் தொலைவில் இந்தியக் கடற்பகுதியில் 2 படகுகளில் தென்பட்ட 15 இலங்கைத் தமிழர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர். அவர்கள் வந்த 2 பிளாஸ்டிக் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

## இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பிரணாப் முகர்ஜி அண்மைக் காலத்தில் கொழும்புக்கு வருவதற் கான ஏற்பாடு ஏதும் இல்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஒட்டி இலங்கை அரசுடன் பேசுவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை விரைவில் கொழும்புக்குத் தாம் அனுப்புவார் என ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூட, சென்னையில் வைத்துத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்திருந்தாராயினும், அவ்வாறு வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வருவதற்கான ஆயத்தங்கள் ஏதும் செய்யப்படவில்லை எனத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

என்றாலும், 'சார்க்' அமைப்பின் அமர்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பெப்ரவரி மாதத்தில் கொழும்புக்கு வருவதற்கு வாய்ப்பு உண்டு என்றும் -

அந்த உத்தேச விஜயத்தை அவர் மேற்கொண்டாலும், அதற்கும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு தைப்பொங்கலன்று இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வருகின்றமை கூட வழமையான இருதரப்பு உறவுகள் மற்றும் 'சார்க்' கட்டமைப்புத் தொடர்பானதே. அதற்கு மேல் இந்த விஜயத்தில் குறிப்பிடத்தக்க விடயம் ஏதும் இல்லை என்றும் தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-சி)

## சூட்டுறவுச் சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டனர் என்றும், அவர் தப்பிச் செல்வதற்காக ஓடியவேளை அவரைத் துரத்திச் சென்று சுட்டனர் என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (அ-சி)

## இராணுவத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்துள்ளது. இதன் மூலம் 23 வருடங்களுக்குப் பின்னர் தெய்வேந்திர முனை முதல் பேதுரு முனை வரை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இந்த வெற்றிக்கு வித்திட்ட இராணுவத்தினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்கு முதல் தெற்கு வரை மக்கள் தடையின்றிப் பயணம் செய்யும் காலம் உருவாகியுள்ளது. கடந்த காலங்களில் இந்தப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு 100 மில்லியன் வரை கப்பமாகப் பெற்றுக்கொண்டிருந்த புலிகளின் நிதி விரோதச் செயல்களின் வரலாற்றை நாம் மறந்துவிட முடியாது.

### வடக்கு, கிழக்கு மக்களின் நல்வாழ்வுக்கு வசதி செய்க

வடக்கு, கிழக்கு மக்களின் ஜனநாயகத்தின் விடிவுக்கும் அவர்களது நல்வாழ்வுக்கும் வசதி செய்யும் வகையில் இந்த வெற்றி அமைந்துள்ளது என்பதை இவ்வேளையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதில் பெருமைகொள்கிறேன்.

எனது மிக நெருங்கிய நண்பர் ஜோஸப் பரராஜசிங்கம் நத்தார் தினத்தில் இறை வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார். சர்வதேச ஊடக தினத்திற்கு முதல்நாள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் உதயன் பத்திரிகை ஸ்தாபனத்தின் மீது கைக்குண்டு வீசித் தாக்கப்பட்டது. அதேபோல் வருடம் பிறந்த முதலாம் நாளில் மகேஸ்வரன் எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவை மட்டுமா? வவுனியா பூவரசங்குளம் பகுதியில் அகதிகள் முகாம் தீமூட்டி எரிக்கப்பட்டது. பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள், தாக்கப்பட்டார்கள். இவற்றிற்கெல்லாம் காரணமாக இருந்தவர்கள் என்ன நோக்கத்தைக் கொண்டு செயற்பட்டனர் என்பதை யாவரும் அறிவர்.

### மிகப்பெரிய விடயங்களில் வெற்றி சூடும் இவ்வேளையில் சிறிய பிரச்சினைகள் கஷ்டமல்ல

எனக்கோ எனது அரசுக்கோ குந்தகம் விளைவிக்கும் விதத்தில் சில சக்திகள் செயற்படுவதை நான் அறிவேன். மிகப் பெரிய விடயங்களை எல்லாம் கையாண்டு வெற்றி சூடிவிடும் இந்தவேளையில், இத்தகைய சிறிய பிரச்சினைகளை எதிர்கொள்வது கஷ்டமான காரியமல்ல.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது எந்தப் பிரச்சினையையும் எதிர்கொண்டு அவற்றுக்கு முகம் கொடுத்து அவற்றைத் தீர்த்துவைப்பேன் என்ற நம்பிக்கையிலேயே இப்பதவியை ஏற்றுக்கொண்டேன். எனவே சிறு குழுக்கள் மூலம் ஏற்படும் எத்தகைய பிரச்சினைகளையும் தீர்ப்பது எமக்குப் பெரிய விடயமல்ல என்பதை இவ்வேளையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எமது படையினரின் வெற்றிக்கு இடையூறாக எந்த சர்வதேச நாடுகளும் எமக்கு அழுத்தங்களைத் தரவில்லை. அவர்களின் ஒத்துழைப்பு எமக்கு இருக்கிறது.

ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் இந்த வெற்றியைப் பகிர்ந்து கொண்டு தாய் மண்ணைக் கட்டிக் காப்பதற்கு ஒன்றாகக் கைகோத்து செயற்பட வேண்டும் எனக் கோரி நிறைவு செய்கிறேன். - என்றார். (அ-சி)

## வான்., ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் வீச்சையும், வான் தாக்குலையும் உடன் நிறுத்துமாறு கோருகிறேன்.

- இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கடந்த செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் எழுதிய கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்ச்சியான ஷெல் வீச்சு மற்றும் வான்தாக்குல்களும் காரணமாக இரண்டு மாவட்டங்களிலும் இருந்து பெருவாரியாக மக்கள் இடம்பெயர்ந்து வேறு பாதுகாப்பான பகுதிகளுக்கு சென்று கொண்டிருக்கின்றனர். மக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களை தேடிச்சென்று கொண்டிருக்கின்றனர்.

இரவு-பகல் பாராது அவர்கள் வாழ்விடங்கள் மீது ஷெல் வீச்சுக்களும், வான்தாக்குல்களும் இடம்பெறுகின்றன. இதனால் மக்கள் குறிப்பிட்ட ஓரிடத்தில் தங்கி நில்லாது அந்த இடங்களைக் கைவிட்டு கொட்டும் மழையிலும், மோசமான காலநிலைக்கு மத்தியிலும் தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களைத்தேடி இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

### மக்களின் அவல நிகழ்வு அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது

இந்த அவலமான நிகழ்வு என்பது வன்னி மக்களது வாழ்வில் ஒரு அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் இந்த மக்களின் பேரவலத்தைப் பார்க்கும் போது பெரும் துன்பமும் துயரமும் ஏற்படுகின்றது. இந்தப் பேரவலத்தை ஓரளவேனும் தணிக்கக்கூடிய வகையில் இந்த கண்மூடித்தனமான ஷெல் வீச்சுக்களையும் - வான்தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டுகிறேன்.

வன்னியில் மக்கள் இன்று படுகின்ற இந்தப் பேரவலத்தை நாளும் பொழுதும் நேரில் காணும் வன்னி பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குள்ள சட்ட ரீதியான உரிமைகளின் அடிப்படையில் இந்த கொடூரமான ஷெல் வீச்சையும், வான்தாக்குலையும் உடன் நிறுத்துமாறு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று வன்னியில் மருத்துவமனைகளும், மருத்துவர்களும் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்கள் தமது சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் உச்சமான மருத்துவ சேவையை முழுமையாக மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் மிகக்கடுமையாக நோய் வாய்பட்டுள்ள நோயாளர்களை அம்புலன்ஸ் ஊடாக அவசர அவசரமாக வவுனியாவிற்கும் அநுராதபுரத்திற்கும் எடுத்துச்செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

### பாதை மூடப்பட்டதால் உயிரிழக்கும் ஆபத்து

ஆனால், கடந்த சில நாள்களாக வன்னிக்கும் வெளிமாவட்டங்களுக்கும் இடையிலான பிரதான போக்குவரத்துச் சாலை முற்றாக மூடப்பட்டுள்ளதால், அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டிவர்கள் உயிரிழக்கும் பெரும் ஆபத்து தோன்றியுள்ளது.

ஒரு மனிதன் தனக்குரிய மருத்துவ சேவையை எவ்வித தங்குதடையுமின்றிப் பெற்றுக்கொள்வது அவனது அடிப்படை உரிமையாகும்.

பிரதான பாதை மூடப்பட்டதனால் அநியாமாக உயிரிழக்கும் அபாயம் தோன்றியுள்ளது. இது முழுக்க முழுக்க மனிதாபிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும்.

மனித உயிர்காக்கும் இப்பணிக்கு பாதை மூடப்பட்டுள்ளமையால் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. இதைக்கவனத்தில் எடுத்து எதுவித தாமதமின்றி பிரதான போக்குவரத்துப் பாதையை திறந்துவிட ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளையில் இந்தப் பிரதான பாதை மூடப்பட்டுள்ளமையால் உணவு நெருக்கடியும் வன்னிப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ளது. உலக உணவுத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நாளில் உள்வரும் வாகனத் தொடரணிகள் வவுனியா இராணுவச் சோதனை நிலையத்தில் வழிமறிக்கப்பட்டு காலதாமதப்படுவதால் குறிப்பிட்ட ஒரு வாரத்திற்குரிய பங்கீட்டு உணவுப் பொருள்கள் வன்னி மக்களுக்கு கிடைக் காமலேயே போய்விடுகின்றது.

தொழில் வாய்ப்பின்றி செய்தொழிலை இழந்து எதுவித வருமானமும் இன்றி அல்லற்படும் இடம்பெயர்ந்த மக்கள் முழுமையான பட்டினியை எதிர்நோக்கி நிற்கின்றனர்.

ஆகவே, வாரம் தோறும் எடுத்து வரப்படும் உணவுத்தொடரணி வாகனங்கள் எந்தவிதமான இடையூறும் இன்றி வன்னிக்குள் வருவதற்கு அவை துரிதமாக விநியோகிக்கப்படுவதற்கேற்ற வகையில் எதுவித காலதாமதமுன்றி ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கு உரிய முறையில் அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்தனர் என்று பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இத் தாக்குதலை விடுதலைப்புலிகளின் அணியினரே மேற்கொண்டனர் என்று படைத்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

படுகாயமடைந்த ஆறுபேரும் திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் விமானப் படையினரும் பொலிஸாரும் இணைந்து தீவிர தேடுதல்களை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

## அரசாங்கத்தாலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறுப்புக் கூறவேண்டும். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினர் கூட லஸந்தவின் கொலை குறித்துக் கவலைப்படுகின்றனர்.

ஆகவே, இக்கொலையைச் செய்த புலனாய்வுப் பிரிவினரைக் கைதுசெய்யவும் இந்த ஆபத்தான நில்லமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார். (அ-சி)


பட்டப் படிப்புகள் கல்லூரி
புதிய மாணவர்களை அனுமதித்தல் 2009/10
யாழ்., பேராதனைப் பல்கலைக் கழகங்களின் பின்வரும் பட்டப் பாட நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
★கலை மாணி B.A ★வணிக மாணி B.Com
க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப் பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
விரிவுரைகள் 10.01.2009 ஆரம்பமாகின்றன.
பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

அறிவொளி NALLUR
சிங்களம்
E.S.பியதாச
(Sinh. Trd. SLTS-I)
புதியபிரிவு
Start 10.01.09
5pm
Sat, Sun 5pm

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ் நகர்
புதிய பிரிவு
3 மாத காலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
பேராசிரியர்:- திரு.லீலாக் கிருஸ்ணன்
ஆரம்பம்:- 11.01.2009
Sun 3.30pm
(Sat/Sun- 3.30pm)

தேவை
தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக முகாமையாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தகுதி:- குறைந்தபட்சம் உயர்தரம்.
(நல்லூர் பிரதேசத்திற்குள் உட்பட்டவர் விரும்பத்தக்கது)
தொடர்பு:- 077 6685138, 077 1606508, 021 222 3184

விற்பனையாகிறது
❖ A/L மீளாய்வு விண்ணப்பப் படிவம்- 10/-
❖ English Medium பயிற்சிப் புத்தகங்கள்
❖ புலமைப்பரிசில் 2009 இக்கான புத்தகங்கள்
அன்னை புத்தகசாலை
இல:7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 9881

GAQ 1ST IN COM.
யாழ்., பேராதனை
பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்
B.A I
B.A II
B.A பேராதனை
B.Com. Part II
B.Com. Part III
விரிவுரைகள் 10.01.2009 ஆரம்பமாகின்றன
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

24 கணிதம் - II மீள்பரீட்சையாம்!
O/L மீள்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச விசேட வகுப்புக்கள்
ஆரம்பம்:- திங்கள் (12.01.2009) காலை 7.00மணி

| | மொழி மூலம் | |
|---|---|---|
| | தமிழ் | ஆங்கிலம் |
| கிழமை நாட்கள் | காலை 7.00-9.00 | காலை 9.00-11.00 |
| சனி/ஞாயிறு | மாலை 2.00-4.00 | மாலை 2.00-4.00 |

By:- A.ரமேஸ் B.Sc (Hons)
S.சுதர்ஷன் B.Sc (Spl.in.App.Sc. & Com. Stu.)
எடிசன் அக்கடமி வட்டுக்கோட்டை
Free Class தினமும்

இன்று ஆரம்பம்
A/L 2011
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
&
Day Class (கலை)
காலை 9.00 மணி
DMI

A/L Day Class
(வர்த்தகப் பிரிவு)
ஜனவரி 12
காலை 9.00 மணி
DMI நாவலர் வீதி, யாழ்.

A/L 2011 Commerce Unit
English Medium Classes to begin soon.
Please register before 20th January.
DMI
Navalar Road, Jaffna.

DMI நிர்வாகம் விடுக்கும் விசேட அறிவித்தல்
DMI இல் இன்று 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் A/L - 2011 & Day Class பிரிவுகளுக்கு இடநெருக்கடி ஏற்படுமென DMI நிர்வாகம் கருதுவதனால் 20 நிமிடங்கள் முன்னதாக சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.
- நிர்வாகம் -
DMI


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org